அரியாலை

93 ஆவது

சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா

2012

12.04.2012 - வியாழக்கிழமை

(கலாசார விழா)

13.04.2012 - வெள்ளிக்கிழமை

(நந்தன புதுவருடப்பிறப்பன்று - கலை விளையாட்டு விழா)

THE PRINCESS OF WALES Hospital

வேல்ஸ் இளவரசி வைத்தியசாலை

- முதியோர் பராமரிப்பு இல்லம்
- குறைந்த கட்டண 24 மணிநேர வெளிநோயாளர் பிரிவு
- பார்மசி
- சகலவிதமான இரத்த,சிறுநீர் பரிசோதனைகள்
- ஸ்கானிங் (Ultra Sound Scaning)
- E.C.G
- டாக்டர்களின் ஆலோசனைகள்
- இருதயநோய் சம்மந்தமான ஆலோசனைகள்
- IVF/UIF Programme (மகப்பேறு)
- கண்பரிசோதனைகள்
- கண் சத்திர சிகிச்சை
- பொது சத்திர சிகிச்சை
- குழந்தைகளுக்கான வைத்திய சேவை
- முறிவு, நெரிவு வைத்திய சேவை
- சாரதி அனுமதி மருத்துவச் சான்றிதழ், வைத்தியசான்றிதழ்

யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியர்களின் சேவை

தொடர்புகளுக்கு

132,Kachcheri Nallur Road, Jaffna. T.P-:0214922589 Fax-:0212226180

உரிமையாளர் க.குகதாசன்

SRI JEYA SALOON

ஆண், பெண்களுக்கான முடி வெட்டுதல்
சேவ் செய்தல்
மசாஜ் செய்தல்
முடி நிறம் தீட்டல்
முடி நேராக்கல்
பேசியல் ஆகியவற்றுக்கு நாடவேண்டிய இடம்

பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.

அரியாலை 93ஆவது

சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா - 2012

சுதேசிய கீதம்

பெருக இன்பம் பெருகும் – நம்
அரியா லையம்பதிப் பெருநாள்
வருக நல் வளமுடன் – வையகத்தின்
பாரிய சுதேசியத் திருநாள்

சித்திரைத் தீந்தமிழ் நாள் – தமிழர்கள்
சிந்தை குளிர்ந்திடும் நாள்
நித்திய மேன இன்ப நினைவினிலே
நீந்திடும் சார்ந்த திருநாள்

ஆண்டு புதிதொன்று – பிறந்ததென
ஆனந்தம் பொங்கிடும் பொன்னாள்
யாண்டும் எதன்மிசையும் – கருணையின்
ஈரம் பயின்றிடும் நாள்

இன்பப் புதுத் திருநாள் – இனிமை
ஏறும் பொது திருநாள்
அன்புக் கனி பிழிந்தே – அழகினில்
ஆடிக் களித்திடும் நாள்

காலையினில் ஊறிடும் நாள் உடல்
கலையினில் தேறிடும் நாள்
சிலையென இருந்தே தீந்தமிழ் – அன்னை
வென்று சிரித்திடும் நாள்.

ஆக்கம் : அரியாலையூர். கவிஞர் வே. ஐயாத்துரை.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஆதீன குரு முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய சுவாமிகள்

ஆசிச் செய்தி

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலக மெலாம்" தமிழையும் சைவத்தையும் பேணிப் பாதுகாத்து வரும் கிராமங்களில் முன்னிலை வகிப்பது அரியாலை என்னும் யாழ் நகரில் அமைந்துள்ள பெரிய கிராமமாகும்.

தமிழர்களின் விளையாட்டு கலை, கலாச்சார பாரம்பரியங்கள் அழிந்து போய்விடக்கூடாது என்ற நல்லெண்ணத்தோடு இங்கு வாழ்ந்த உயர் கல்விமான்கள், சான்றோர்களால் 1919ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு ஒவ்வொரு சித்திரைப் புதுவருடப் பிறப்பன்றும் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டு வரும் இவ்விழா இவ் வருடம் 93ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவாக நடைபெறுவது பாராட்டுதற்குரியது.

தொடர்ந்தும் இவ்விழா, பல நூறு ஆண்டுகள் கொண்டாடப்படுவதோடு, எமது பாரம்பரிய கலை, கலாச்சாரங்களை, விளையாட்டுக்களை அழியாது பேணப்பட வேண்டும்.

இவ் விழாவிற்கு எனது ஆசியை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

வாழ்க தமிழ்! வளர்க சைவம்! உயர்க சுதேசியம்!

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள்

அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர்
தேவஸ்தான தலைமைச் சிவாச்சாரியார்
"கிரியா பூஷணம்" பிரம்ம ஸ்ரீ முரளீதரக் குருக்களின்

ஆசிச் செய்தி

யாழ்ப்பாண மாநகரத்தில் மிகப் பெரிய கிராமமான அரியாலையில் அமைந்துள்ள பழமையும், அற்புதம் நிறைந்ததுமான ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் பிரதம குருவாக இருந்து 93ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இவ் விழாவானது, மக்கள் மத்தியில் சுதேசிய உணர்வை வெளிப்படுத்துவதோடு பாரம்பரிய கலை - விளையாட்டுக்கள் போன்ற பல்வேறு நிகழ்வுகள் வளர்ச்சியடையவும் மறைந்து போய்விடாது பேணிப் பாதுகாத்திடவும் வழிவகுக்கும் என்ற அசையா நம்பிக்கை.

இத்தகைய சிறப்பு வாய்ந்த விழா பல நூறு வருடங்கள் தொடர்ச்சியாக நடைபெற எனது ஆசிகளையும் வாழ்த்துக்களையும் வழங்குகிறேன்.

சு.முரளீதரக் குருக்கள்

அரியாலை 93ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா - 2012

காப்பாளரின் ஆசிச் செய்தி

சித்திரை வருடப்பிறப்பன்று எமது மக்களால் கொண்டாடப்பட்டுவரும் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா இவ் வருடம் 93ஆவது வருட விழாவாக பர்ணமித்துள்ளது. விழாத் தலைவர்கள், விழாவை நடாத்தும் நிர்வாகம், மாறினாலும் ஒரு தொடர்ச்சியை ஏற்படுத்திக் கொண்டு காலத்துக்கேற்ற மாற்றத்துடன் சுதேசியம் என்ற அடிப்படை பிழறாமல் இவ்விழா – விழா நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றமை பாராட்டுக்குரியதாகும். இவ்விழாவுடனான எனது தீவிர தொடர்பு ஏறக்குறைய ஐம்பது வருடங்கள் – அரை தசாப்த காலம். எம்மோடு சேர்ந்து அவர்களோடு சேர்ந்து இப்பாரிய விழாவின், கலை, விளையாட்டுப் போட்டிகள், நாடக நிகழ்ச்சிகளை நடாத்திய பலர் அமரரானாலும் புலம் பெயர்ந்து சென்றாலும் இவ்விழா தொடர்ந்து நடைபெறுவதைக் காண மனம் மகிழ்ச்சியடைகின்றது.

ஊர் மக்களின் அன்பளிப்புகளோடும் பங்குபற்றலோடும், இளம் சமூகத்தை தன்னோடிணைத்து, அனுபவமுள்ளோரது வழிகாட்டலோடு இவ்விழா நடைபெறுகின்றது. ஏறக்குறைய 10 வருடங்களுக்கு இவ்விழா மலரில் எனது கருத்துக்களைத் தெரிவித்திருந்தேன். அதனை செயல்படுத்தியுள்ளேன். இந்நிலையில் எமது கிராமத்தைச் சேர்ந்த புத்திஜீவிகள், தொழில் நிபுணர்கள், ஆசிரியர்கள், சமூக சேவையில் தம்மை இணைத்துக் கொண்டவர்கள், இளைஞர்கள், சிறுவர், சிறுமிகள் அனைவரும் இத்தொடர்ச்சியான இவ்விழாவை தொடர்ந்து சிறந்த முறையில் நடாத்துவதற்கு தம்மாலியன்ற ஒத்துழைப்பை வழங்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வருடம் 93ஆவது விழாவை ஒழுங்கமைத்து செயல்படுத்தும் விழாக் குழுவினரின் முயற்சிகள் பாராட்டுக்குரியவை. – தொடர்ந்து விழா சிறப்புற எனது வாழ்த்துக்கள்.

செ.பத்மநாதன்
காப்பாளர்,
சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா – அரியாலை.

அரியாலை

93ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழா

கௌரவ தலைவர் திரு. இ. சடகோபன் அவர்களின்

(ஓய்வு நிலை வங்கியாளர்)

வாழ்த்துச் செய்தி

என் அன்புக்குரிய அரியாலை வாழ் மக்களே! அனைவருக்கும் என் அன்புக்கினிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

எம் மூதாதையர்களினால் 1919ம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட விழாதான் இந்த சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழா. இந்த விழா இம்முறை 93ஆவது விழாவாக கொண்டாடப்படுவது எமக்கு பெருமையையும் மகிழச்சியையும் தருகிறது. எமது மூதாதையர் இந்த விழாவை பல்வேறு நோக்கங்களுக்காக தீர்க்கதரிசனத்துடன் ஆரம்பித்து வைத்தார்கள். ஒருவரை ஒருவர் நேசித்தல், ஒருவருக்கொருவர் உதவியாக இருத்தல், ஒன்றாகச் செயல்படல், விட்டுக்கொடுத்து வாழ்தல் போன்ற சீரிய பண்புகளையும் பொதுவான தீர்மானங்களுக்கு கட்டுப்படுதல், சமூகப் புரிந்துணர்வு அடிப்படையில் ஐக்கியப்பட்டு வாழல் போன்ற நல்ல பண்புகளை அடிப்படையாகக் கொண்டது.

கல்வி, கலை, விளையாட்டு, சமூக சேவை போன்ற பல்வேறு துறைகளிலும் பரிநாம வளர்ச்சி பெற்று உயர்ந்தவர்களாக ஊர் பற்றுள்ளவர்களாக வாழவேண்டும் என வாழ்த்துகிறேன்.

93ஆவது விழாவாக வீறு நடைபோடும் இந்த சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் தலைவர் என்ற பெருமையை எனக்கு தந்த அரியாலை வாழ் மக்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதோடு விழா சிறப்புற நடைபெற வாழ்த்துகிறேன்.

வாழ்க சுதேசியம்

இ. சடகோபன்

அரியாலை

93 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா

நிர்வாக சபை - 2012

காப்பாளர்	:	உயர்திரு செ. பத்மநாதன்
தலைவர்	:	திரு. இ. சடகோபன்
சிரேஷ்ட உபதலைவர்	:	திரு. ஆ. தேவராஜா
உப தலைவர் (கலை)	:	திரு. ச. உருத்திரேஸ்வரன்
உப தலைவர் (விளையாட்டு)	:	திரு. ஆ. நா. செல்வராசா
பொதுச் செயலாளர்	:	திரு. யோ. ரிசாந்தன்
உப செயலாளர் (கலை)	:	Dr. ம. அருங்கரன்
உப செயலாளர் (விளையாட்டு)	:	திரு. சொ. சண்முகலிங்கம்
பொருளாளர்	:	திரு. மு. குணம்
உபபொருளாளர் 1	:	செல்வி. அ.இராதை
2	:	செல்வன் கு. கஜிந்தன்
நாடகப் பொறுப்பாளர்	:	திரு. அ. சந்திரகுமார்

நிர்வாகசபை உறுப்பினர்கள்

திரு. S.T. பத்மநாதன்
திரு. த. நிருஷன்
திருமதி K. விஜயலட்சுமி
திரு. P . செந்தில்குமரன்
திரு. சி. ஆனந்தசுந்தரம்
திரு. ந. கேசவராஜ்
திரு. K. கனகசபாபதி
திருமதி. லி. கமலராணி

கணக்காய்வாளர் : திரு. N.S. சண்முகரட்ணம்
(பிரதம கணக்காளர், மாவட்டச் செயலகம் – யாழ்ப்பாணம்)

ஆலோசனைக்குழு - 2012

திரு. செ பத்மநாதன் (காப்பாளர்)
திரு. க.மயில்வாகனம் (அமைப்பாளர்)
திரு. அ.உபயசேகரம்
திரு. க. கனகசபாபதி
திரு.வி.கே.சண்முகலிங்கம்
திரு. பொ. பஞ்சலிங்கம் J.P
திரு.மு.தனபாலசிங்கம்

அரியாலை 93 ஆவது சுதேசிய திருநாட்கொண்டாட்ட விழாவின் நிர்வாகசபை உறுப்பினர்கள்

இருப்போர் (இடமிருந்து வலம்) : 1. திரு. S.T. பத்மநாதன் 2. திரு. ச. உருத்திரேஸ்வரன் (கலை – உப தலைவர்) 4. திரு.யோ.ரிசாந்தன் (செயலாளர்), 5. திரு. செ.பத்மநாதன் 6. திரு. இ. சடகோபன் (விழாத் தலைவர்) 7. திரு. ஆ. தேவராசா (சிரேஷ்ட உபதலைவர்), 8. திரு. ஆ. நா. செல்வராசா (விளையாட்டு- உப தலைவர்) 9. திரு. க. மயில்வாகனம்

நிற்போர் (இடமிருந்து வலம்) : 1. திருமதி. லி. கமலராணி, 2. திருமதி K. விஜயலட்சுமி 3. திரு. ந. கேசவராஜ் 4. திரு. அ. சந்திரகுமார் (நாடகப் பொறுப்பாளர்) 5. செல்வன் கு. கஜிந்தன் (உப பொருளாளர்-கலை) 6. திரு. சி. ஆனந்தசுந்தரம் 7. திரு. சொ. சண்முகலிங்கம் (விளையாட்டு உப செயலாளர்) 8. Dr. ம. அருங்கரன் (கலை – உப செயலாளர்) 9. செல்வி. அ. இராதை (உபபொருளாளர் – விளையாட்டு)

படத்திற்கு சமூகமளிக்காதோர் : திரு. K. கனகசபாபதி, திரு.P. செந்தில்குமரன் 3. திரு. நிருஷன்

உங்கள் மங்கல நிகழ்வுகள் எதுவானாலும் மேலும் மெருகூட்ட....

விஷ்ணுஜா பந்தல் சேவை

சொக்கட்டான் பந்தல் , சாதாரண பந்தல்,
மேக்கப் , மணமகளுக்குரிய சோடனை வகைகள், மணவறை வகைகள் ,
பிளாஸ்ரிக், இரும்புக் கதிரைகள் பாய்கள் , சமையல் பாத்திரங்கள், ஜீசிங், சோடா வகைகள்

அனைத்து சேவைகளையும் பெற்றுக்கொள்ள நீங்கள்
நாடவேண்டிய இடம்
இல.2, நொத்தாரிஸ் லேன், அரியாலை, யாழ்ப்பாணம்.

Rainbow Music Group

சகல விதமான மங்கல நிகழ்வுகளிலும் இசையால் மேலும் மகிழ்விக்க இசை இன்ப வானின் உதய தாரகை
இன்றைய இளைய தலைமுறையினர் இதயம் கவரும் இளம் இசையமைப்பாளர்
T. துவாரகனின்

வானவில் இசைக்குழு

Ariyalai, Jaffna.

தொடர்புகளுக்கு:
நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்
J. தருமராசா. T.P : 0779110166

இசை இயக்குனர் : T. துவாரகன்
இல : 43, கலைவாணி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
T.P : 0212220750, 077604830

உரிமையாளர் : கா. ஜெயதாஸ்

ஜெயாஸ் டிஜிரல்

வீடியோ போட்டோ

அதி நவீன டிஜிரல் வீடியோ கமராக்கள் மூலம்
வீடியோ படப்பிடிப்பு மற்றும் கணினி மூலமான
வீடியோ மிக்ஸிங் டிஜிரல் போட்டோ மற்றும்
கரிஸ்மா Story book Album செய்தல்

இல.203/5, கண்டி வீதி, அரியாலை. T.P. 0776154069

அரியாலை

93 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா 2012

13.04.2012 (நந்தன புதுவருடப்பிறப்பன்று)

இரவு கலை விழாவின் பிரதம விருந்தினர்

உயர்திரு சிவலிங்கம் சத்தியசீலன்

(S.L.A.S. I. B.A. (Cey), MA (Cey) செயலாளர் கல்வி – பண்பாட்டலுவல்கள்

விளையாட்டுத்துறை அமைச்சு – வடமாகாணம்

அவர்களின்

வாழ்த்துச் செய்தி

அரியாலைக் கிராமத்தில் சித்திரைப் புத்தாண்டினை கடந்த 92 வருடங்களாக சுதேசிய திருநாளாக தொடர்ச்சியாக கொண்டாடி நீண்டதொரு பாரம்பரியத்தினை பேணி வருவது பாராட்டத்தக்கதாகும். இந் நிகழ்வானது அவ்வூர் மக்களின் ஒற்றுமையாக கூடி வாழும் மனப்பான்மையைக் காட்டி நிற்கின்றது. தமிழர் பாரம்பரியங்களை எடுத்துக் காட்டும் கலை நிகழ்வுகள், பாரம்பரிய விளையாட்டுக்கள் என்பவற்றை உள்ளடக்கி புத்தாண்டு கொண்டாட்ட விழா நடாத்தி வருவது ஒரு சிறப்பம்சமாகும்.

உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழும் அரியாலை வாழ் மக்கள் இது ஊரின் பெருவிழா என நினைத்து ஒன்று திரண்டு இவ் விழாவினை சிறப்புற நிகழ்த்துவது பெருமைக்குரிய விடயமாகும். புது வருட தினத்தன்று நடைபெறும் கலைவிழா பல்வகை நிகழ்ச்சிகளையும் உள்ளடக்கி கண்ணுக்கும், செவிக்கும், மனதிற்கும் குதூகலத்தை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. மக்களின் மனதில் சமாதானமும் அமைதியும் ஏற்பட்டு மகிழ்ச்சியான வாழ்வு வாழ எல்லாம் வல்ல இறைவனின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டிப் பிரார்த்திப்பதுடன் புத்தாண்டு நிகழ்வுகள் சிறப்புற அமைய எனது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

"வளமுடன் மலர்க சித்திரைப் புத்தாண்டு"

– வளர்க சுதேசியம் –

சி. சத்தியசீலன்

செயலாளர்,

கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு,

வடமாகாணம்.

அரியாலை

93 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா 2012

13.04.2012 (நந்தன புதுவருடப்பிறப்பன்று)

இரவு கலை விழாவின் கௌரவ விருந்தினர்

பேராசிரியர் சு. மோகனதாஸ்

(B.Sc. (Hons.) (S.L), Ph.D (Adelaide), C.Chem.

(முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்

அங்கத்தவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு)

அவர்களின்

வாழ்த்துச் செய்தி

அரியாலை மக்களால் 90 ஆண்டுகளுக்கு மேல் தமிழ் வருடப் பிறப்பு தினத்தில் கோலாகல மாகக் கொண்டாடப்பட்டுவரும் சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன். பாரம்பரியமாக சுதேசிய உணர்வோடு இவ்விழா சுதேசிய கலை, கலாசார நிகழ்ச்சிகளுக்கு முக்கியம் கொடுத்துக் கொண்டாடப்பட்டு வந்தது. ஆரம்பத்தில் ஆங்கிலேயர் ஆட்சியில் எமது கலாசாரத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்து கொண்டாடப்பட்ட எமது விழா சென்ற இரு தசாப்தங்களாக உள்நாட்டுப் போரினாலும், இடப் பெயர்வுகளாலும் பல இடர்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டாடப்பட்டு வந்தது. இவ்வருடம் எமது விழாவை முன்னர் போன்று பாரம் பரிய சுதேசிய கலை, கலாசார நிகழ்வுகளுக்கு கூடிய சந்தர்ப்பங்கள் வழங்கக் கூடிய ஆண்டாகத் திகழ்கிறது. அரியாலையில் இயல்பு நிலை தோன்றி எமது சுதேசிய விழா முன்னர் போன்று எழுச்சியான விழாவாக அமைய வேண்டுமென விரும்புகிறேன்.

வழு மரம் ஏறுதல், தலையணைச் சண்டை, முட்டி உடைத்தல் மற்றும் கோலாட்டம், கும்மி, வில்லுப்பாட்டு போன்ற பல சுதேசிய நிகழ்வுகளுடன் பாட்டு, நடனம், நாடகம் போன்றவையும் கல்வியில் திறமையை வெளிக்காட்டிய மாணவர்களைப் பாராட்டுதலும் அரியாலைக்குப் புகழ் தேடிய பெரியோரைக் கௌரவித்தலும் இவ்வாண்டு நிகழ்வுகளில் மிகச் சிறப்பாக நடைபெறவிருக்கிறது. இனி வருங்காலங்களில் கிட்டி அடித்தல், மாட்டுவண்டிச் சவாரி போன்ற நிகழ்வுகளும் இடம் பெற வேண்டும்.

முன்னர் போன்று கொழும்பு மற்றும் பிற நாடுகளிலுள்ள நம்மவர்கள் வருடப்பிறப்பிற்கு ஊருக்கு வரவேண்டும். போட்டிகளிலும் விழாவிலும் பங்கு கொள்ளுதல் வேண்டும். எமது 93ஆவது சு. தி. கொ. வி சிறப்பாக அமைய வேண்டுமென்று வாழ்த்திக் கொண்டு இனிவரும் காலங்களில் மேன்மேலும் பொலிவுடன் சு. தி .கொ. வி அமைய எல்லாம் வல்ல ஸ்ரீ சித்திவிநாயகரை வேண்டி இவ் வாழ்த்துச் செய்தியை நிறைவு செய்கிறேன்.

– சு. மோகனதாஸ் –



அரியாலை
93 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா
- 2012-
கலாசார விழாவின் பிரதம விருந்தினர்
எந்திரி உயர்திரு வேதநாயகம் இரகுநாதன்

[ஆலோசகர், மத்திய பொறியியல் உசாத்துணை நிறுவகம் – CECB]

அவர்கள் வழங்கும்

வாழ்த்துச் செய்தி

எமது முன்னோர்கள் ஆங்கில ஆட்சியின் கீழ் எமது மக்கள் தமது மொழி , நடை, உடை, பண்பாடு முதலியவற்றைப் பாதுகாப்பதற்கும் எமது பாரம்பரியத்தை மக்களுக்கு விளக்குவதற்கும் இற்றைக்கு 93 வருடங்களுக்கு முன் சித்திரைப் புத்தாண்டு சுதேசிய நாளாகக் கைக்கொண்டு விழா நடாத்தினார்கள்.

இன்றைய காலகட்டத்திலும் கூட அவர்கள் சிந்தித்துச் செயல்படுத்தியது எவ்வளவு பொருத்தமானது என்று எண்ணுகிறோம். எமது முன்னோர் தேடி வைத்து எமக்களித்த அருஞ் செல்வமாகிய மொழி, பண்பாடு முதலியவற்றை நினைவு கூர்ந்து அவற்றைப் பாதுகாத்து, மேலும் செழுமைப்படுத்த வேண்டியது எமது தலையாய கடன். எமது ஊர் மக்கள் ஒருமித்துக் கொண்டாடும் இவ்விழாவின் பயன் எமது மக்கள் செம்மையாக வாழ்வதே. எமது மக்கள் கல்வி கேள்விகளில் சிறந்து பண்பாக வாழ வாழ்த்துகிறேன்.

எந்திரி வேதநாயகம் இரகுநாதன்
இளைப்பாறிய பணிப்பாளர்.
நீர்ப்பாசனத் திணைக்களம்
கொழும்பு.

அரியாலை

93 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா

- 2012-

விளையாட்டுப் போட்டி பிரதம விருந்தினர்

உயர்திரு எஸ். அண்ணாதுரை

(பணிப்பாளர் விளையாட்டுத் திணைக்களம், வடமாகாணம்)

அவர்கள் வழங்கும்

வாழ்த்துச் செய்தி

அரியாலை கிராமத்தின் கலை, கலாசாரம், பாரம்பரியம் என்பவற்றை உணர்வுடன் உள்வாங்கி கொண்டாடப்பட்டுவரும் 93ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

சுதேசிய பாரம்பரியத்தை வளர்க்கும் நோக்கில் அமைந்த இவ்விழாவில் கலை, விளையாட்டு போன்ற பல்வேறு அம்சங்கள் தொடர்ந்தும் வீறுநடையுடன் வளர்ச்சியடைதல் காலத்தின் தேவையாகும்.

இவ்விழாவானது சகிப்புத்தன்மை, ஆளுமைப் பண்புகளை வளர்த்தல், விட்டுக் கொடுத்து நடத்தல், சகோரத்துவம், குழுச் செயற்பாடு போன்ற இன்னோரன்ன சிறந்த பண்புகளை வளர்ப்பதற்கான அடித்தளமாக அமைகின்றது என்பது இங்கு மனங்கொள்ளத்தக்கது.

இவ்விழாவில் துறைசார் புலமையாளர்களைக் கௌரவிப்பதும் மற்றோர் சிறப்பம்சமாகும். இப்பணி தொடர வேண்டுமென்பது எனது பேரவாவாகும்.

அத்துடன் இவ்விழாவை சிறப்புற முன்னெடுக்கும் தலைவர், நிர்வாகிகள் மற்றும் அரியாலை மக்கள் யாவருக்கும் எனது புதுவருட வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

இவ்விழா சிறக்க எல்லாம் வல்ல நல்லூர் சட்டநாதர் சிவனின் அருளை வேண்டுகின்றேன்.

எஸ். அண்ணாதுரை

பணிப்பாளர், விளையாட்டுத் திணைக்களம்

வடமாகாணம், யாழ்ப்பாணம்.

அரியாலை

93 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா - 2012

13.04.2012 பகல் விளையாட்டுப் போட்டிகள் நிகழ்வின் சிறப்பு விருந்தினரான விளையாட்டுத் துறையில் அரியாலைக்குப் பெருமை சேர்த்த முன்னாள்
யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி வீராங்கனையும் முன்னாள்
யாழ் மாவட்ட உயரம் பாய்தல் சாதனையாளரும் முன்னாள்
அகில இலங்கை CT&FC கழக மெய்வல்லுநர் அணியின்
அங்கத்தவருமாகிய

திருமதி. பிரபாவதி கமலநாதன் அவர்களின் வாழ்த்துச் செய்தி

அரியாலை மக்கள் எமக்குரிய சுதேசிய கலை – விளையாட்டுக்களை – கலாச்சார விழுமியங்களை மறந்து விடக்கூடாது. இவற்றை அழியவிடக் கூடாது என்ற உயர்ந்த குறிக்கோளோடு எமது முன்னோர்கள் 1919ஆம் ஆண்டு சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை ஆரம்பித்தார்கள். அவர்கள் எண்ணங்கள், சிந்தனைகள், மறக்கப்படாது. தொடர்ந்து கொண்டாடப்பட்டு. இவ்வருடம் 93ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவாக கொண்டாடப்படுவது எமக்கெல்லாம் மகிழ்ச்சி தருவதாகும்.

விழா சிறப்பாக நடைபெற எனது வாழ்த்துக்கள்.

திருமதி பிரபாவதி கமலநாதன்

அரியாலை

93ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் சிரேஸ்ட உப தலைவர்

திரு. ஆ. தேவராஜா

(அகில இலங்கை சமாதான நீதிவான்)

அவர்களின்

வாழ்த்துச் செய்தி

1919ஆம் ஆண்டு எமது ஊர் மக்களால் ஆரம்பிக்கப்பட்ட இப்பெருவிழா இவ்வருடம் 93ஆவது நிறைவு விழாவாக அடி எடுத்து வைக்கின்றது. இவ்வருட விழாவுக்கு நான் சிரேஸ்ட உபதலைவராக தெரிவு செய்யப்பட்டதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைவதுடன் இவ்விழா நிர்வாகத்தினருக்கு நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

எமது இளைஞர்கள், யுவதிகள் கல்வி மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் உணர்வு பூர்வமாக பங்குபற்றுவதை அவதானித்தேன். ஆனால் கடந்த கால விழாக்களில் எமது ஊர் இளைஞர் யுவதிகளால் ஆக்கப்பட்ட நாடகங்களை விழா மேடைகளில் காணக் கூடியதாக இருந்தது. ஆனால் இவ்வருட விழாவில் நாடகங்கள் வெளியிடங்களிலிருந்தே கொண்டு வரப்பட்டவை என எண்ணும்போது மிகவும் கவலையாக உள்ளது. எனினும் அடுத்து வருடங்களில் நடைபெறும் எமது விழாக்களில் எம் இளைஞர் யுவதிகளால் நடிக்கப்பட்ட நாடகங்கள் மேடையேற்றப்பட வேண்டும். அதற்கு எம் ஊர் பெரியவர்கள் அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

சுதேசிய விழாவானது எதிர்காலத்தில் எம்மக்கள் எல்லோரும் ஒற்றுமையாக ஒன்று சேர்ந்து உறுதியான சிந்தனையுடன் பல நூற்றாண்டைத் தாண்டி நகர வேண்டுமென்று எல்லாம் வல்ல ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

ஆ.தேவராஜா J.P.(W.I)

அரியாலை

93 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா 2012

அரியாலை அபிவிருத்திச் சங்கம் வழங்கும் வாழ்த்துச் செய்தி

தாபிதம் Estd 21.03.1981

அரியாலை அபிவிருத்திச் சங்கம்

Ariyalai Development Society

அலுவலகம்:
435, சுண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

Office:
435, Kandy Road
Ariyalai, Jaffna.

அரியாலை வாழ் மக்கள் தங்களது ஐக்கிய உணர்வு, சுதேசிய உணர்வு மற்றும் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை நிலைநாட்டுவதற்கு உதவும் நோக்குடனும் பிரதேச கலை, கலசாரம் மற்றும் விளையாட்டுத் துறைகள் உட்பட்ட பல்துறை வளர்ச்சியை வெளிக்கொணர்ந்து போற்றும் நோக்கமாகவும் ஆண்டுதோறும் சித்திரைப் புதுவருடப் பிறப்பையொட்டிக் கொண்டாடிவரும் இப்பாரம்பரிய விழா நடப்பு வருடம் 93ஆவது விழாவாகப் பரிணமித்துள்ளமை மிகவும் பெருமைக்குரிய விடயமாகும்.

அரியாலைப் பிரதேச மக்களின் சமூக பொருளாதார மற்றும் கல்வித்துறை மேப்பாட்டிற்காக 1981ஆம் ஆண்டு தொடக்கம் செயலாற்றிவரும் எமது சங்கத்திடம் முதன் முதலாக இவ்விழாவிற்கான ஆசிச் செய்தி கோரி நிற்கும் 93ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நிர்வாகத்தினருக்கு முதற்கண் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். எமது சங்கத்தின் செயற்பாடுகளுக்கு அரியாலை வாழ் மக்கள் வழங்கும் அங்கீகாரமாகவும், வலுவூட்டும் சிந்தனையின் வெளிப்பாடாகவும் நடப்பு வருட சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நிர்வாகத்தினரின் இக் கோரிக்கையை நாம் நோக்குகின்றோம்.

நடப்பு வருட விழா சிறப்புற நடந்தேற எமது சங்க நிர்வாகத்தின் நல்லாசியைத் தெரிவிப்பதோடு எல்லாம் வல்ல இறைவனின் திருவருளையும் வேண்டி நிற்கின்றோம்.

S.T. பத்மநாதன்
தலைவர்

பொ. நடராசா
செயலாளர்

01.04.2012

(சங்க செயற்குழுவின் சார்பாக)

அரியாலை 93ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா - 2012

(நந்தன வருடம்)

அரியாலைக்கு பெருமை சேர்த்தோர் வரிசையில் கௌரவம் பெறுவோர்

சிறந்த கல்வியாளர்

திரு. சூடாமணி அகிலன் B.B.A (Hons), H.R.M Spl ,MPA , SLAc S அரியாலையில் சூடாமணி – பத்மா தம்பதியினரின் மகனான இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ் / புனித பெனடிக்ற் றோ.க. வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை யாழ் / கனகரத்தினம் ம.ம. வித்தியாலயத்திலும், உயர் கல்வியை யாழ் பல்கலைக்கழகத்தில் "தொழில் நிர்வாகமாணி" பிரிவில் "மனித வளம்" சிறப்புக்கலை – கொழும்பு ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் "பொது நிர்வாகத்துறையில்" முதுமாணி – இலங்கை கணக்காளர் சேவை பரீட்சையிலும் சித்தி எய்தி – வடமாகாண தொழில்துறை திணைக்களத்தில் கணக்காளராகவும், சமூக சேவைகள் திணைக்களத்தில் பதில் கணக்காளராகவும் பணிபுரிகின்றார். பாடசாலை – பல்கலைக்கழகத்தில் சிறந்த "கூடைப்பந்தாட்ட" வீரர் நாடக நடிகர். சமூக சேவையாளர்

2011 க.பொ.த. உயர்தர பரீட்சையில் 3A பெற்றமைக்காக

செல்வி ஆராஅமுதன் சிவாஜினி

அரியாலை ஆராஅமுதன் – குணராணி தம்பதிகளின் மகளான செல்வி ஆ.சிவாஜினி தனது ஆரம்பக் கல்வியை யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயத்திலும் கற்று, 2011ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. (உ/த) பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் 3A பெற்று யாழ் மாவட்டத்தில் 3ஆம் நிலை வகிக்கின்றார். 2011 – இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக் குழுவின் வினா – விடைப் போட்டியில் தேசிய ரீதியில் 1ஆம் இடம் – வாழ்த்துக்கள்.

நாடக நடிகர், இசைக் கலைஞன்

சபாபதிப்பிள்ளை பாலசிங்கம்

சங்கீத பூஷணம்

அரியாலையில் பிறந்த இவர், இளவயதில் தந்தையார் அண்ணாவி சபாபதிப்பிள்ளை தயாரித்து மேடையேற்றிய "சதி அனுசூயா" பவளக்கொடி, கிருஷ்ணன் தூது, தூக்குத்தூக்கி, நளன் தமயந்தி, மனோகரா, பனையரசன், இளங்குமரன், காத்தவராயன், யயாதி, பதிபக்தி, அபிமன்யு, பூதத்தம்பி, அமுதவல்லி (மந்திரிகுமாரி) "மனோன்மணி" போன்ற நாடகங்களில் 1949, 1950களின் நடுப்பகுதியில் பெண் பாத்திரமேற்று நடித்து புகழ் பெற்றவர். நல்ல குரல்வளமும், இசை வளமும் உள்ளவரான இவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் "சங்கீத பூஷணம்" விருதைப்பெற்று, இசை ஆசிரியராகப் பணிபுரிந்து பல புகழ்பெற்ற இசைக் கலைஞர்களை உருவாக்கியவர். யாழ். அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின் இசையாசிரிய செயலாளராக 1959 – 1995ஆம் ஆண்டு வரை பணிபுரிந்தவர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி கூட்டுத்தாபனம் என்பவற்றில் அதிவிசேட பிரிவு இசைக் கலைஞர் – கனடா –இளங் கலைஞர் மன்றத்தில் "கானசொரூபி" பட்டம் பெற்றார். இவரது மூன்று பெண்பிள்ளைகளான கல்யாணி சுதர்சன், அமிர்தவக்ஷினி, உதயகரன், பாலினி கண்ணதாசன் ஆகியோர் பட்டம் பெற்ற இசை நடனக் கலைஞர்களாவர்.

மேடை நாடக நடிகர்

திரு. சங்கரப்பிள்ளை பொன்னுத்துரை

அரியாலையில் பிறந்த இவர், தனது இளமைக் காலத்தில் மேடை நாடகத்தில் கொண்ட நாட்டம் காரணமாக புகழ்பெற்ற அமரர் அண்ணாவி சபாபதிப்பிள்ளை அவர்கள் தயாரித்த "நளதமயந்தி" யயாதி, வீர சகுந்தரம், துஷ்யந்தன், பூம்புகார் ஆகிய நாடகங்களில் பிரதான பாத்திரமேற்று நடித்து அரியாலைக்கு புகழ் சேர்த்தவர். முதுமைக் காலத்திலும் தனது பழைய சக நடிகர்களுடனும் இணைந்து கலைஞர் வி.கே. சண்முகராசா அவர்கள் நெறியாள்கை செய்து இசையரசு ச.பாலசிங்கம் அவர்கள் இசை வார்ப்பில் உருவான "சகுந்தலை" இசை நாடகத்தில் "துஷ்யந்தனாக" நடித்தவர். அரியாலை சனசமூக நிலையம் நிர்மாணித்து முதல் மேடையேற்றிய நாடகத்தில் நடித்தவர்.

சிறந்த விளையாட்டு வீராங்கனை

செல்வி சுரேந்தினி சிதம்பரநாதன் B.A (Hons) M.P.Ed. (India) M.Sc Yoga (India)

அரியாலையில் சிதம்பரநாதன் தேவசேனா தம்பதியரின் மகளாகிய இவர் யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ். பல்கலைக்கழகம்; தமிழ்நாடு – அண்ணாமலை பல்கலைக்கழகம் ஆகியவற்றில் விளையாட்டுத் துறையில் விருதுகள் பல பெற்றவர்.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி தடகளப் போட்டியில் பல வெற்றிகள், வலைப்பந்தாட்டப் போட்டி colours பெற்றவர். யாழ் பல்கலைக்கழகம் வலைப்பந்து, கூடைப்பந்து, மேசைப் பந்து அணிகளில் அங்கம் வகித்து colours பெற்றவர். வலைப்பந்து, தாச்சி அணிகளின் விளையாட்டு அணியின் தலைவி. பல்கலைக்கழக சிறந்த சகலதுறை விளையாட்டு வீராங்கனை விருது. 1998ல் யாழ் மாவட்ட வலைப்பந்தாட்ட அணியின் தலைவி. சிறந்த கூடைப்பந்தாட்ட வீராங்கனை விருது. அண்ணாமலைப் பல்கலைக்கழக வலைப்பந்தாட்ட தலைவி. கூடைப்பந்து, மேசைப்பந்து உடற்பயிற்சிக் கல்வியில் முதுநிலைப்பட்டம். அரியாலை ஐக்கிய கழக வீராங்கனை – வலைப்பந்து அணி முகாமையாளர். தேசிய தடகள நடுவர். தொழில் நுட்ப அலுவலர். சிறந்த நடனக் கலைஞருமாவார்.

சிறந்த சமூக சேவகர்

திரு.முத்தையா தனபாலசிங்கம் H.N.Dip-in-Com., P.G.Dip.-in - Ed.

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர்)

அரியாலை அமரர்கள் முத்தையா – நாகம்மா தம்பதியரின் மகன். ஆரம்பக் கல்வி அரி / ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை, இடைநிலைக் கல்வி – யாழ் / கனகரத்தினம் ம.ம.வி. உயர்கல்வி பலாலி களிஷ்ட பல்கலைக்கழகம். வார்த்தக ஆசிரியராக இலங்கையில் பல பாகங்களிலும் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். தனது இளமைக் காலம் முதல் அரி / சரஸ்வதி சன சமூக நிலையத்துடன் இணைந்து சமூகப் பணி, 89ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா – தலைவர், பல அமைப்புக்களில் பதவி வகித்தவர்.

தற்போது

பொருளாளர் – அரியாலை அபிவிருத்திச் சங்கம்

செயலாளர் – யா/ அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை பழைய மாணவர் சங்கம்

கணக்காய்வாளர் – பல ஸ்தாபனங்கள்

அரியாலை
93ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் பொதுச் செயலாளர்
திரு. யோகரத்தினம் ரிசாந்தன் B.Sc. (Mgt.)
அவர்களின்
வாழ்த்துச் செய்தி

அரியாலை மக்களால் பாரம்பரியமாக கொண்டாடப்பட்டு வரும் விழா சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா. இம்முறை 93வது சுதேசிய திருநாள் விழாவாக கொண்டாடப்படுகிறது. இவ்விழாவின் பொதுச் செயலாளராக என்னை தெரிவு செய்யப்பட்டமையை இட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். எமது சுதேசிய விழா என்பது அரியாலையில் வசித்து வரும் அனைத்து சமூக மக்களாலும் ஒற்றுமையாகவும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்புடனும் அர்ப்பணிப்புடன் பாரம்பரிய கலை பண்பாட்டு விளையாட்டு நிகழ்வுகளை போட்டி போட்டு கலந்து கொள்வதாகும். ஆனால் தற்காலங்களில் இவ்வாறான பங்களிப்பு மக்களிடையே குறைந்து செல்வதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. எனினும் எமது நிர்வாகத்தினர் பணம் வசூலிக்க உள்ளூரிலும் சரி வெளியூரிலும் சரி செல்லும் போது எந்தவித மறுப்பும் தெரிவிக்காமல் மனமுவர்ந்து தங்களது அன்பளிப்பினை வழங்குகின்றார்கள். இந்த சந்தர்ப்பத்தில் மக்களாகிய உங்களுக்கு நான் தெரிவிக்க விரும்புவது என்னவென்றால் இவ்விழாவானது தங்களால் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகத் தினர் கொண்டாடுவதற்கு அல்ல மக்களாகிய நீங்கள் கொண்டாடுவதற்கு எனவே இச்சந்தர்ப்பத்தில் நீங்கள் அனைவரும் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும் பாரம்பரிய கலை நிகழ்வுகளான நாடகம், கிராமிய சம்பாஷணை, நடனம் போன்ற நிகழ்வுகளுக்கு போட்டியாளர்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை. இது எமக்கு மிகவும் கவலை அளிக்கின்றது. இவ்வாறான நடைமுறை தொடருமானால் எமது மக்களிடமிருந்து நாடகக் கலையானது அற்றுப்போய்விடும். எனவே நாடக்கலை அற்றுப்போகக் கூடாது என்ற காரணத்தினால் நாம் இரவு கலை நிகழ்வுக்காக நாடக மன்றங்களுக்கு பணம் செலுத்தியே எம்மால் அரங்கேற்றப்படுகின்றது. இவ்வாறான நிகழ்வுகளை உள்ளூர் மக்களாகிய நீங்கள் செய்ய வேண்டும் என மக்களாகிய உங்களிடம் தாழ்மையாக கேட்டுக்கொள்கின்றேன்.

எனவே அரியாலை மக்களாகிய நீங்கள் அனைவரும் ஒற்றுமையுடன் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

யோ. ரிசாந்தன்

அரியாலை 93ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் கலைப்பகுதித் தலைவர்

திரு. சதாசிவம் உருத்திரேஸ்வரன்

B.A (Cey), Dip.in Agric (Cey), Dip. in. HRM (Ind.)

(அகில இலங்கை சமாதான நீதவான்)

அவர்கள் வழங்கும் வாழ்த்துச் செய்திகள்

பிரிட்டிஷாரின் ஆட்சிக் காலத்தில் இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதாரக் கொள்கை வகுப்பாளராகவும் தீர்மானிப்பவராகவும் மிகவும் செல்வாக்குடையவர்களாகவும் விளங்கிய எமது கிராமத்து உயர்கல்விமான்கள் ஒன்றிணைந்து, எமது இனத்தின் அடையாளங்களான பாரம்பரியக் கலை, விளையாட்டு, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்களைக் கைவிட்டு விதேசியத்தின்பால் நாட்டங்கொள்வதைத் தடுக்கும் நோக்கில் 1919ம் ஆண்டில் இருந்து சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை ஆரம்பித்து, பாரம்பரிய கலை விளையாட்டுப் போட்டிகளுடன், மிகப் பிரம்மாண்டமாகத் தயாரிக்கப் படும் நாடக மேடையேற்றத்துடன் விழா சிறப்பாக நிறைவுறும். கடந்த கால இடர்கள், தடைகள் மத்தியிலும் தொடர்ச்சியாக நடைபெற்றுவந்த எமது விழா இவ்வருடம் 93ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவாகக் கொண்டாடப்படுவது எமது மூதாதையர்களை அவர்கள் எண்ணங்கள், சிந்தனைகளை இன்றுவரை எம் மக்கள் மறக்கவில்லை என்பதை வெளிக்காட்டுகின்றது. இது இன்னும் பல நூற்றாண்டுகள் தொடர்ச்சியாக நடைபெற்று எமக்கு பெருமை சேர்க்கும் என்பது உறுதி.

மேற்படி எமது விழாவை நடாத்துவதற்கான நிர்வாகத்தில் அங்கம் வகிப்பது பெருமைக்குரிய விடயமாகவும், கௌரவமாகவும் இன்று கருதப்படும் நிலையில் அனுபவம் வாய்ந்தவர்களுடன் இளைஞர்கள், சிறார்கள் இன்னும் கூடுதலாகக் கைகோர்க்கும் பட்சத்தில், அண்மைகால குழப்ப நிலையில் நிலவும் தொய்வு நிலை நீங்கி, முன்புபோல் மீண்டும் எழுச்சியுடன் தொடர்ச்சியாக விழா சிறப்பாக நடைபெறும். "குடும்பியும் கடுக்கனும்" மீள எழுவதுபோல் அருகிவரும் கிளித்தட்டு, கெந்திப்பிடித்தல், சடுகுடு, கபடி. வார் ஓட்டம், கிட்டி அடித்தல், போர்த் தேங்காய் அடித்தல், கிடுகு பின்னுதல் போன்ற எமது பாரம்பரிய விளையாட்டுக் களும் நிச்சயம் மீள எழும். எமது அடையாளம் பிரகாசிக்கும். நாம் .... நாமாவோம்! அதுவரை எமது இளைய சந்ததியினர் அதனை மறக்காது நினைவில் வைக்க, கொண்டு செல்ல எமது விழா நிச்சயம் வழிவகுக்கும்.

முன்னோடி கலை விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றிய மாணவ மாணவியர்க்கும், ஊக்குவித்த பெற்றோர்கள், ஆசிரியர்கட்கும் எமது நன்றிகள். 93ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா சிறப்பாக நடந்தேற வாழ்த்துவதோடு, முன்னோடிப் போட்டிகள் சிறப்பாக நடைபெற எல்லா வகையிலும் ஒத்துழைத்த சகலருக்கும் இதய பூர்வமாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்

ச. உருத்திரேஸ்வரன்

அரியாலை

93ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா 2012

கௌரவ பொருளாளர் திரு.முருகேசு குணம் அவர்களின் வாழ்த்துச் செய்தி

எமது ஊர் பாரம்பரிய விழாவான அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் நூற்றாண்டை கொண்டாட எதிர்பார்த்திருக்கும் நிலையில், 93ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். தமிழர்களின் கலை, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்கள் என்பன திட்டமிட்ட வகையில் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இன்றைய கால கட்டத்தில் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே எமது முன்னோர்களால் தூர நோக்கோடு உருவாக்கப்பட்டு, 92 வருடங்களாக பல இன்னல்கள், இடைஞ்சல்கள், இடம்பெயர்வுக்கு மத்தியிலும் தடைப்படாது வளர்க்கப்பட்டு வந்த இந்த சுதேசிய திருநாட் கொண்டாட்டத்தை, தமிழ் சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று இளையோர், முதியோர் என்ற பாகுபாடின்றி அனைத்து அரியாலை மக்களும் ஒன்று சேர்ந்து கொண்டாடுவதையிட்டு புளகாங்கிதம் அடைகின்றேன். புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் எம்மூர் மக்களும் இச்சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவுக்கு தமது பங்களிப்பை நல்கி ஊக்கம் கொடுத்து வருகிறார்கள்.

கடந்துசென்ற விழாக்களைப்போல இவ்வருடம் நடைபெறவுள்ள 93ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவிலும் பல விளையாட்டு கலைப் போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

விலைவாசிகள் வானத்தை எட்டி, வாழ்க்கைச் செலவு பலமடங்கு உயர்வடைந்துள்ள இன்றைய நிலையிலும் எம்மூர் மக்களும், புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் எம்மவர்களும் பெரு நிதி வழங்கி எம்மை உற்சாகமூட்டுவதுடன் விழா சிறப்புறவும் உதவியுள்ளார்கள். விழா சிறப்புற நிதியுதவி வழங்கிய அனைத்து ஆதரவாளர்களுக்கும், மற்றும் சகல விதத்திலும் உதவிகள், ஒத்தாசைகள் புரிந்த அன்புள்ளங் களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் 93ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா பொருளாளர் என்ற வகையில் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

இவ்வருடம் நடைபெற ஏற்பாடாகி உள்ள 93ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா மிகவும் விமரிசையாக நடைபெற வேண்டுமென வாழ்த்திக் கொண்டு, இப்பெருவிழாவானது நூற்றாண்டைக் கடந்து மேலும் பல நூற்றாண்டுகள் தொடர்ச்சியாக நடைபெற எல்லாம் வல்ல சித்திவிநாயகப் பெருமானின் திருவருளை வேண்டி எனது ஆசியுரையை நிறைவு செய்கின்றேன்.

மு. குணம்

அரியாலை

93ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் விளையாட்டுப பகுதி

உபதலைவர் திரு. A.N. செல்வராசா

(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)

அவர்களின் வாழ்துச் செய்தி

93ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்டத்தின் விளையாட்டுக்குழு உபதலைவர் என்ற ரீதியில் வாழ்த்துச் செய்தி வழங்குவதற்கு எனக்குக் கிடைத்த சந்தர்ப்பம் மகத்தானதொன்று என்றே மனம் மகிழ்கின்றேன்.

அந்நியர் எம் மக்களின் அடையாளத்தை அழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது இற்றைக்கு 93 ஆண்டுகளுக்கு முன்பே எம்முன்னோர் சுதேசிய சிந்தனையாளர்களாக செற்பட்டமையால் தான் இன்று இவ்வரிய விழாவைக் கொண்டாடுகின்றோம். எம் மக்களின் வாழ்வியல் விழுமியங்கள் திரிபு பெறும் இக்கால கட்டத்தில் சுதேசியத்துடன் இணைந்த விளையாட்டுப் போட்டிகள், கலைப் போட்டிகள் என்பன இவ்விழாவை மேலும் மெருகூட்டுகின்றது.

எம்மூர் இளைஞர்கள், அருகி வரும் சுதேசிய விளையாட்டுக்களில் கூடிய கவனமெடுத்து நிலை நிறுத்தி அவற்றில் பங்கெடுத்து சுதேசியத்தைக் காப்பாற்ற முன்னின்றுழைக்க வேண்டும். அத்துடன் போட்டிகளில் பங்கெடுக்கும்போது சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல், ஒற்றுமை பேணுதல் போன்ற நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளுதல் போன்றவை விழாவிற்கு அர்த்தத்தைக் கொடுக்கும்.

பல சுதேசிய விளையாட்டுக்கள் விண்ணப்பங்கள் இன்மை காரணமாக இரத்துச் செய்ய வேண்டியேற்பட்டுள்ளதென்பதை மன ஆதங்கத்துடன் தெரிவிக்க வேண்டியுள்ளது. நாம் எல்லோரும் இப்புதிய வருடத்தில் சுதேசிய திருநாட் கொண்டாட்டத்தில் பங்கெடுக்கும் நல்ல நேரத்தில், எதிர்கால சுதேசிய விழாக்கள் மேன்மேலும் சிறப்புற உழைப்போம் என்ற உறுதியுடனும் இவ்விழா இனிதே நடந்தேற எல்லாம் வல்ல ஸ்ரீ சித்தி விநாயகரையும் , மகாமாரித் தாயையும் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

A.N.செல்வராசா

அரியாலை

93 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா - 2012

கனடா வாழ் அரியாலை மக்கள் சார்பாக நாடக கலைஞரும், பிரபல இலக்கியவாதியும், பத்திரிகை எழுத்தாளரும், நிகழ்ச்சித் தொகுப்பாளருமான "அரியாலை ஒன்றியம் - கனடா" அமைப்பின் இணைப்பாளருமான

திரு. பரமநாதன் ஸ்ரீஸ்கந்தன் அவர்கள் வழங்கும் வாழ்த்துச் செய்தி

சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா! நினைத்தாலே உள்ளம் உவகை கொள்ளும். எங்களுக்கே உரிய பொதுவான விழா. சித்திரைப் புதுவருடம் அண்மிக்கின்றது என்றால் எமது கிராமமே எழுச்சி கொள்ளும் எல்லோர் மனதிலும் ஒருவித குதூகலம் பிறக்கும். முன்னோடி கலைப்போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள், நாடகப் போட்டிகள், மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம். இறுதி நாள் நிகழ்வாக அரியாலை கலைஞர்கள் பங்கேற்கும் மாபெரும் "வரலாற்று நாடகம்", "நகைச் சுவை நாடகம்" விழாவை ரசிப்பதற்கு வெளி இடத்து மக்களும் குவிவர்.

இந்த இந்த அனுபவங்களை, இதயத்தில் சுமந்தபடி பூமிப்பந்தில் வேறொரு தட்ப வெப்ப நிலையைக் கொண்ட "கனடா" நாட்டில் வாழ்ந்தாலும், எமது எண்ணம், சிந்தனை எல்லாம் எமது மண் – எமது மக்கள் – உறவுகள் – அயலவர் – நண்பர்கள், நாம் வழிபட்ட ஆலயங்கள், கற்ற பள்ளிகள், நூல் நிலையங்கள், விளையாடிய மைதானங்கள் எமது மக்கள் ஒன்றுபட்டுக் கொண்டாடும் "சுதேசிய திருநாட் கொண்டாட்டம்" என்றே சுழன்று கொண்டிருக்கும். புலம்பெயர்ந்து வாழும் எம் மக்களின் ஏக்கத்தைப் போக்க – இதோ "நந்தி"க் கொடியை ஏற்றி கடந்த 23 வருடங்களாக விழா கொண்டாடி வருகின்றோம். சிறிய ஆறுதல்.

கனடாவில் வெளிவரும் "தாய்வீடு" பத்திரிகையில் கடந்த சில வருடங்களாக, மாதா மாதம் எமது அரியாலைக் கலைஞர்களைப் பற்றி தொடர்ந்து எழுதி வருகின்றேன். இது எதிர்காலத்தில் நின்று போகாமல் இருக்க இளைய தலைமுறைக் கலைஞர்கள் பலர் உருவாக வேண்டும். கலை , விளையாட்டுக்களில் முன்னிலை வகித்த எமது கிராமம் மீண்டும் முன்னிலை பெறவேண்டும் என்பதே எமது பேரவா.

1919ஆம ஆண்டு உயர்ந்த குறிக்கோளோடும் தீரக்க தரிசனத்தோடும் ஆரம்பிக்கப்பட்ட விழா, குழப்ப காலத்திலும் நிலைகுலையாது கொண்டாடப்பட்டு இவ்வருடம் நந்தன சித்திரைப் புதுவருடப் பிறப்பன்று 93ஆவது விழாவாக கொண்டாடப்படுவது எமக்கெல்லாம் மகிழ்ச்சி..... பெருமை.

எங்கள் நினைவு உங்கள் மேல் இருப்பது போல
எங்கள் ஆதரவும் என்றும் உங்களுக்கு

93ஆவது விழா வெகுவிமரிசையாக நடைபெற கனடா வாழ் அரியாலை மக்கள் சார்பாக எமது நல்வாழ்த்துக்கள்.

என்றும் உங்கள் நினைவாக

திரு. ப. ஸ்ரீஸ்கந்தன்

கனடா

அரியாலை

93 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா - 2012

நோர்வே வாழ் அரியாலை மக்கள் சார்பாக

திரு. மயில்வாகனம் ஸ்ரீதேவா அவர்களின்

வாழ்த்துச் செய்தி

அரியாலை மக்கள், உலகில் எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ, அங்கெல்லாம் சித்திரைப் புதுவருடம் என்றால் எழுச்சியும், மலர்ச்சியும் கொள்வார்கள். காரணம் எங்கள் தாய் மண்ணில், எங்களுக்கே யுரிய பாரம்பரியங்களுடன் கொண்டாடப்படும் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழவா ஆகும். மக்கள் குரோதங்களை மறந்து ஐக்கியத்துடன் ஒற்றுமையாக இவ் விழாவை நடாத்தி மகிழ்வீர்கள்.

93ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா இனிதே நடைபெற எமது வாழ்த்துக்கள்.

ம.ஸ்ரீதேவா

நோர்வே

அரியாலை

93 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா - 2012

லண்டன் வாழ் அரியாலை மக்கள் சார்பாக

திரு. சிவசுந்தரம் ராஜ்பால் அவர்கள்

வழங்கும்

வாழ்த்துச் செய்தி

லண்டனில் வாழ்ந்துவரும் அரியாலை மக்களாகிய எங்களுக்கு எம் மண், எம் உறவுகள், நண்பர்கள், அயலவர்கள், அவர்கள் கொண்டாடும் கலை – கலாசார – விளையாட்டு விழாக்களையும் என்றும் மறவாதவர்கள்.

சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா என்பது அரியாலையில் எமது மூதாதையர்களால் 1919ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ச்சியாக, தொய்வின்றி கொண்டாடப்பட்டு வந்து இவ்வருடம் 93வது சுதேசிய விழாவாகக் கொண்டாடப்படுவது எமக்கெல்லாம் பெருமை. வருடா வருடம் நாமும் நிதி வழங்கி உதவுவது எமக்கெல்லாம் பெரு மகிழ்ச்சி.

விழா தொடர்ந்து பல நூறு ஆண்டுகள் கொண்டாடப்பட்டு எமது பாரம்பரிய கலை – விளையாட்டுக்கள் பேணிப் பாதுகாக்கப்படும் என்பது நிச்சயம்.

அரியாலை மக்களுக்கு தொடர்ந்து எமது உதவிகள் வழங்கிவருவோம்.

93வது விழா சிறப்பாக நடைபெற லண்டன் வாழ் அரியாலை மக்கள் சார்பாக எமது வாழ்த்துக்கள்.

திரு. சி. ராஜ்பால்
லண்டன்.

அரியாலை

93வது rd சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா -2012

கலாசார விழா

காலம் : **11.04.2012 புதன்கிழமை இரவு 7.00 மணி**

இடம் : **அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய "விசுவநாதன் அரங்கு"**

தலைமை : **திரு. இ. சடகோபன்** அவர்கள் (ஓய்வு நிலை வங்கியாளர்)

பிரதம விருந்தினர் :

எந்திரி. உயர்திரு வே. இரகுநாதன் அவர்கள்

[ஆலோசகர், மத்திய பொறியியல் உசாத்துணை நிறுவகம் – CECB]

நிகழ்ச்சிநிரல்

- மங்கல விளக்கேற்றுதல்
- இறை வணக்கம்
- சுதேசிய கீதம் இசைத்தல்
- வரவேற்புரை
- தலைமையுரை
- பிரதம விருந்தினர் உரை
- நன்றியுரை
- விழாவையொட்டி நடைபெற்ற தமிழ் பேச்சுப் போட்டியில் 1ம் பரிசு பெற்றோர் பேச்சு
- நாட்டுப்பாடல்
- கிராமிய சம்பாஷணை
- **நடனம்** ஏழாலை அபிநயா கலாலயாவின் திருமதி. ஜெயந்தி சுகிர்தன் வழங்கும் நாட்டியாஞ்சலி
- **பட்டிமன்றம்** - அகில இலங்கை இளங்கோ மன்றம் வழங்கும் "ஈழத்தமிழரின் கலையும் பண்பாடும் இன்றும் பெரிதும் பேணப்படுகின்றதா? பேணப்படவில்லையா?
- **தாளலயம்** அமரர் மூதறிஞர் அரியாலையூர் கவிஞர் வே.ஐயாத்துரை அவர்கள் நினைவாக திருமதி விஜயா குமாரதாசன் வழங்கும்

" வீடும் தொலைக்காட்சியும் " (தாளலயம்)

- **நாடகம்** - அல்வாய் மனோகர கானசபா வழங்கும் கலாநிதி த. கலாமணி நெறியாள்கையில்

"பூதத்தம்பி" யாழ்ப்பாண வரலாற்று இசை நாடகம்

12.04.2012 வியாழக்கிழமை காலை 6.30 மணி உள்ளூர் வீதியாக

08 கி.மீ. வீதியோட்டம் - ஆண்கள் பொது 08 கி.மீ சைக்கிள் ஓட்டம் - பெண்கள் பொது

15 கி.மீ சைக்கிள் ஓட்டம் - ஆண்கள் பொது

ஆரம்பிக்கும் இடம் : **அரியாலை கனகரெத்தினம் சந்தி.**

12.04.2012 வியாழக்கிழமை இரவு 7.00 மணிக்கு

மின்னொளியில் கரப்பந்தாட்ட (Set-up) இறுதிப்போட்டி (வடமாகாண ரீதியில்)

அரியாலை அருணோதயா சனசமூக நிலையம்

இ. சடகோபன்	மு. குணம்	யோ. ரிசாந்தன்
தலைவர்	பொருளாளர்	பொதுச் செயலாளர்

அரியாலை

93வது rd சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா - 2012

(நந்தன புதுவருடப்பிறப்பன்று)

பகல் விளையாட்டுப் போட்டிகள்

இடம் : அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானம்

காலம் : 13.04.2012 வெள்ளிக்கிழமை பி.பகல் 1.30 மணி

தலைமை : திரு. இ. சடகோபன் அவர்கள் (ஓய்வு நிலை வங்கியாளர்)

பிரதம விருந்தினர் : திரு. சி. அண்ணாதுரை அவர்கள்
(பணிப்பாளர் விளையாட்டுத் திணைக்களம், வடமாகாணம்)

சிறப்பு விருந்தினர் : திருமதி. பிரபாவதி கமலநாதன் அவர்கள்
(முன்னாள் அகில இலங்கை விளையாட்டு வீராங்கனை)

நிகழ்ச்சிநிரல்

- ❑ விளையாட்டு வீரர்கள் சுதேசிய தீபம் கொண்டுவருதல் (அரியாலை சித்தி விநாயகர் ஆலயத்திலிருந்து)
- ❑ சுதேசிய தீபம் ஏற்றல்
- ❑ சுதேசிய கீதத்துடன் கொடியேற்றல்
- ❑ 100 மீற்றர் ஓட்டம் 13,16,19 - வயதின் கீழ் (ஆண்,பெண்)
- ❑ 50 மீற்றர் ஓட்டம் 10 வயதின் கீழ் (ஆண்,பெண்)
- ❑ 1500 மீற்றர் ஓட்டம் பொது (ஆண்கள்)
- ❑ மூன்று கால் ஓட்டம் 19வயதின் கீழ் (ஆண்கள்)
- ❑ வழு மரம் ஏறுதல் பொது (ஆண்கள்)
- ❑ தலையணைச் சண்டை பொது (ஆண்கள்)
- ❑ முதியோர் ஓட்டம் ஆண்கள் (50 வயதின் மேல்)
- ❑ பாலர் ஓட்டம் 5 வயதின் கீழ் (ஆண்,பெண்)
- ❑ 75 மீற்றர் ஓட்டம் 35 வயதின் மேல் (பெண்கள்)
- ❑ தடை ஓட்டம் பொது (ஆண்கள்)
- ❑ பாடசாலை மாணவிகளின் இசையும் அசைவும் (யா/கனகரத்தினம் ம.ம.வி)
- ❑ 4 X 100 மீற்றர் அஞ்சல் ஓட்டம் பொது (ஆண்கள்)
- ❑ 4 X 200 மீற்றர் அஞ்சல் ஓட்டம் 16 வயதின் கீழ் (ஆண்கள்)
- ❑ சங்கீத கதிரை - பாலர் / 13 வயதின் கீழ் / மேல்/திருமணமான பெண்கள்
- ❑ கயிறு இழுத்தல் இளைஞர்கள் - எதிர் சம்சாரிகள்
- ❑ கயிறு இழுத்தல் செல்விகள் எதிர் திருமணமான பெண்கள்
- ❑ வினோத ஆடைப் போட்டி (பாலர் / 16 வயதின் கீழ் /மேல்) தனி
- ❑ வினோத ஆடைப் போட்டி (16 வயதின் கீழ்/மேல்) குழு
- ❑ பொதுக் கூட்டமும் பரிசளிப்பும் - நன்றியுரை

ஆ.நா. செல்வராஜா
விளையாட்டுத் தலைவர்

சொ. சண்முகலிங்கம்
விளையாட்டுச் செயலாளர்

இரவு கலை விழா நிகழ்ச்சிகள்

இடம் : அரியாலை சனசமூக நிலைய "காசிப்பிள்ளை அரங்கு"

காலம் : **13.04.2012** வெள்ளிக்கிழமை இரவு **7.00** மணி

தலைமை : திரு. இ. சடகோபன் (ஒய்வு நிலை வங்கியாளர்) அவர்கள்

பிரதம விருந்தினர் : உயர்திரு சிவலிங்கம் சத்தியசீலன் BA. (Cey) MA.(Cey) SLAS - I அவர்கள்
[செயலாளர் – வடமாகாண கல்வி பணிப்பாட்டு நூலகள், விளையாட்டுத்துறை அமைச்சு]

கௌரவ விருந்தினர் : பேராசிரியர் சு. மோகனதாஸ் அவர்கள்
[முன்னாள் துணைவேந்தர் யாழ் பல்கலைக்கழகம், அங்கத்தவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு]

நிகழ்ச்சி நிரல்

- மங்கல இசை
- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- சுதேசிய கீதம் இசைத்தல்
- வரவேற்புரை
- தலைமையுரை
- கௌரவ விருந்தினர் உரை
- கலைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசு வழங்கல்
- அரியாலைக்கு பெருமை சேர்த்தவர்களைக் கௌரவித்தல்
  - கல்வி — திரு.சூடாமணி அகிலன்
    கௌரவிப்பு உரை திரு. அ. உபயசேகரம்
  - கலை — திரு. சங்கரப்பிள்ளை பொன்னுத்துரை
    திரு. சபாபதிப்பிள்ளை பாலசிங்கம் (சங்கீத பூஷணம்)
    கௌரவிப்பு உரை திரு. ச. உருத்திரேஸ்வரன்
  - விளையாட்டு — செல்வி சுரேந்தினி சிதம்பரநாதன்
    கௌரவிப்பு உரை திரு. யோ. ரிசாந்தன்
  - சமூகசேவை — திரு. முத்தையா தனபாலசிங்கம்
    கௌரவிப்பு உரை திரு. ச.த. பத்மநாதன்
- பிரதம விருந்தினர் உரை
- நன்றியுரை - செயலாளர் திரு. யோ. ரிசாந்தன்

கலை நிகழ்ச்சிகள்

நடனம் : அரியாலையூர் ஏழிசை மிருதங்க நர்த்தனாலயத்தின் நடனகலா வித்தகர் திருமதி பாலினி கண்ணதாசனின் மாணவிகளின் நடன நிகழ்வு

நாடகம் : பாஷையூர் வளர்பிறை நாடக மன்றம் வழங்கும்
அண்ணாவியார், கலாபூஷணம் பாலதாஸின் நெறியாள்கையில்
"தீர்க்க சுமங்கலி" (இசை நாடகம்)

அரியாலை நகைச்சுவைக் கலாமன்றம் வழங்கும்
அ. சந்திரகுமாரின்
"என்ன பிரகண்டமிது" (நகைச்சுவை நாடகம்)

ச. உருத்திரேஸ்வரன்	ம. அருங்கரன்	ஆ.தேவராஜா
கலைத் தலைவர்	கலைச் செயலாளர்	சிரேஷ்ட உபதலைவர்

அரியாலை 93வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில்

பாஷையூர் வளர்பிறை நாடக மன்றம் வழங்கும்

தீர்க்க சுமங்கலி

இசை நாடகம் - நடிகர்கள்

பி. யூல்ஸ் கொலின்
அ.அல்போன்ஸ்
யூ.பெஸ்டஸ் கொலின்
செல்சி டினோ
சூ.ஜெஜீவ்
பா. ஜிந்துசன்

ஜ.ஜதீபன்
ஜி.ஜீவிதன்
நி. ஜிந்துஜன்

க. சந்துரு
செ. பெகின் - மிருதங்கம்
பி.யோன்சன் - சல்லரி
கி.ம. நெல்சன் - மேடை நிர்வாகம்
பா.தனுஸ்ரன் - ஒருங்கிணைப்பு

ஆர்மோனியம் நெறியாள்கை

கலாபூஷணம் அ. பாலதாஸ்

அல்வாய் மனோகர கான நாடக சபா வழங்கும்

பூதத்தம்பி

யாழ்ப்பாண வரலாற்று இசை நாடகம்

நடிகர்கள்

பூதத்தம்பி – திரு. வெ. துஷ்யந்தன்
அந்திராசி – திரு. க. பரணிதரன்
அட்மிரல் அன்ரனி – திரு. வி. துவாரகன்
அட்மிரல் ஏபிரகாம் – திரு. வெ.சிந்துஜன்
அட்மிரல் றுவான் – திரு. க. மதனாகரன்

அழகவல்லி – திரு. விஜயகுலசிங்கம்
தூதுவர்கள் – திரு. செ. அச்சுதன்
திரு. க. ஜெயதர்சன்

அண்ணாவியார் – கலாநிதி த. கலாமணி அவர்கள்

அரியாலை நகைச்சுவை கலாமன்றம் வழங்கும் அ.சந்திரகுமாரின்

"என்னை பிரகண்டமித்து" வாழ்வியல் சிரிப்பு நாடகம்

நடிகர்கள்

அ. சந்திரகுமார் (இரட்டை வேடம்)
அ. தருண்காந்த
அ.கரேஷ்வரன்
பாபு பிரணராவ்
பொ.சிவபாலன்
அ.ஜீவகரன்
கு.கஜிந்தன்

பட்டிமன்றம்

அகில இலங்கை இளங்கோ மன்றம் வழங்கும் பட்டிமன்றம்

தலைப்பு: ஈழத்தமிழர்களின் கலையும் பண்பாடும்

இன்றும் பெரிதும் பேணப்படுகிறதா? பேணப்படவில்லையா?

நடுவர் : நாடகச் சக்கரவர்த்தி, கலைப் பரிதி, கலாபூஷணம், இசை நாடக நவரச திலகம்
ப.பரராசசிங்கம் J.P

பேணப்படுகிறதா?
வேல் நந்தகுமார்
பரா.ரமேஷ்
ம.பாஸ்கரன்

பேணப்படவில்லையா?
சிவ.முகுந்தன்
பெரிய ஜங்கரன்
கி.கார்த்திகேயன்

மறுபிரசுரம்

அரியாலை தந்த தலைவர்கள்

அமரர் த. சபாரத்தினம்

(லேக் ஹவுஸ்)

அரசியலிலும், கல்வித் துறையிலும், கூட்டுறவு இயக்கத் துறையிலும், மத மறுமலர்ச்சித் துறையிலும், பத்திரிகைத் துறையிலும், மருத்துவத் தொழிலிலும் மற்றும் இன்னோரன்ன பல்வேறு துறைகளிலும் இலங்கைக்கு அருஞ்சேவை செய்துள்ளனர் அரியாலையில் பிறந்த பெருமக்கள் பலர், அவர்களின் அருந்தொண்டை இதுபோன்ற சிறு கட்டுரையில் விரிவாக எழுத முடியாதாகையினால் எமது ஊருக்கு நற்புகழ் ஈட்டித்தந்த ஒரு சிலரை மட்டுமே இங்கே குறிப்பிடுகிறேன். இதனால் ஏனையோரின் பணியைக் குறைத்து மதிப்பிட்டதாகக் கொள்ளலாகாது.

கல்வியிலும் செல்வத்திலும் சிறந்த ஒரு கிராம மாக அரியாலை இன்று திகழ்வதற்கு திரு. விஸ்வ நாதர் காசிப்பிள்ளை தான் மூலகர்த்தாவாக விளங் கினார் என்று சொல்வதில் தவறில்லை. எமது கிராமத்திற்குப் புதிய மதிப்பையும், சிறப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தவர் அவர்தான்.

பசுபதிச்செட்டியார், அப்புக்காத்து, நாகலிங்கம் ஆகியோருடன் சேர்ந்து 1895ம் ஆண்டில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை நிறுவி நல்லை தந்த நாவலர் ஆரம்பித்து வைத்த சைவமத மறு மலர்ச்சிக்குச் செயலுருவம் கொடுத்த காசிப்பிள்ளை யவர்கள் யாழ். குடாநாட்டில் மிகவும் செல்வாக் குடையவர் என்று யாரவராலும் கருதப்பட்டவர்.

1847ம் ஆண்டில் பிறந்து தனது இருபத்தைந்தா வது வயதில் புரக்கிராசியாக மன்னாரில் பணி புரிய ஆரம்பித்த திரு.காசிப்பிள்ளை 1874ம் ஆண்டில் யாழ்ப்பாணத்திற்கு வந்து தொழில் புரிய ஆரம்பித் தார். ஆறுமாத காலத்திலேயே தனது அபார திறமை யினால் யாழ்ப்பாணத்தை வெற்றி கொண்டார். தக்காரும் மிக்காரும் இல்லாது நாற்பதாண்டு காலம் தொழில் புரிந்த திரு.காசிப்பிள்ளை முடிக்குரிய புரக்கிராசியார், மாவட்ட நீதிபதி, மாஜிஸ்திரேட் போன்ற பல பதவிகளை வகித்த போதிலும் இந்துக் கல்லூரியினதும், அதனுடன் இணைந்த கல்லூரி களான வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, உரும்பிராய் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகியவைக ளிலும் மனேஜராகப் பணிபுரிந்த அந்த இருபது ஆண்டு (1895–1915) காலத்திலேதான் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி தனது பால்யப் பருவத்தைக் கடந்து பல மிக்க ஒரு கல்விக் கூடமாக வேரூன்றி திளை த்து ஓங்கி வளர்ந்தது. **இந்துக் கல்லூரி**யை அமைப்பதற்குப் பணம் தேடி இலங்கை முழுவதி லும் மட்டுமல்ல மலேயாவிற்கும் சென்று திரும்பிய காசிப்பிள்ளை யவர்கள் இந்துக் கல்லூரியைக் கட்டி வளர்ப்பதையே தனது முக்கிய பணியாகக் கொண்டார்கள்.

இந்துக் கல்லூரியை அமைக்கும் விஷயத்தில் சேர்ந்து பணிபுரிந்த பசுபதிச் செட்டியார் அவர்களும் அப்புக்காத்து நாகலிங்கம் அவர்களும் காசிப் பிள்ளை அவர்களின் நேர்மைக்கும் தளரா உழைப்

பிற்கும் பெரு மதிப்பளித்தனர். ஆரம்ப காலத்தில் இந்து கல்லூரி இருந்த காணி முழுவதையும் திரு. காசிப் பிள்ளையின் பெயரிலேயே அவர்கள் வாங்கினார் கள். ஆசிரியருக்கு வழங்கும் சன்மானம் போன்ற பல விடயங்களையும் அவரின் முழுப் பொறுப்பி லேயே விட்டுவிட்டனர்.

ஆசிரியர்களுக்கான சம்பளங்கள் நிர்ணயிக்கப் படாத அந்தக் காலத்தில் திரு. காசிப்பிள்ளை மிகவும் நியாயமான முறையில் நடந்துகொண்டதாக இந்துக் கல்லூரி ஆசிரியர்கள் பலர் என்னிடம் கூறியுள்ள னர். பாடசாலைக்கு என அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட பணம் ஆசிரியர்களின் சம்பளத் திற்கும் போதாதாகையால் செட்டியார் வீட்டில் இந்துக் கல்லூரியின் பெயரில் சொந்தக் கணக்கு ஒன்று வைத்திருந்ததாகவும், அதிலிருந்து ஆசிரியர் களுக்குத் தேவைப்படும்போது பணம் கொடுத்து வந்ததாகவும் பல ஆசிரியர்கள் என்னிடம் நன்றியறி தலுடன் கூறியுள்ளனர்.

யாழ்ப்பாணச் சங்கத்தின் தலைவராகவிருந்த வண.டாக்டர் ஜசாக் தம்பையா கூறியதுபோல "30 தொடக்கம் 40 ஆண்டுகள் வரை யாழ்ப்பாணத்தில் முடிசூடாக மன்னனாக திரு. காசிப்பிள்ளை திகழ முடிந்ததெப்படி? அவரின் அபாரத் திறமை மட்டும் காரணமல்ல. சேவை உணர்ச்சியும் நேர்மையுமே அவருடைய செல்வாக்கிற்குக் காரணங்கள்".

மக்களுக்குச் சேவை செய்வதையே தனது பெரும் பணியாகக் கொண்டவர் அவர். குடும்பச் சண்டை முதல் கோஷ்டி சண்டை வரை நேரில் சென்று தீர்த்து வைப்பார். திருமணங்கள் தொடக்கம் இழவு வீடு வரையில் அவர் கலந்து கொள்ளாத வைபவங்களே யாழ்ப்பாணத்தில் இல்லை என லாம். தேவைப்படுபவர்களுக்கெல்லாம் பண உதவி செய்வார். இன்று உயர் பதவிகளில் இருப்பவர்கள் பலர் தமது பெற்றோர் காசிப்பிள்ளையவர்களிட மிருந்து பெற்ற பணவுதவி பற்றிக் கதையாகக் கூறியுள்ளனர். ஏழை மாணவர்கள் பலரை அவர் தன் சொந்தச் செலவில் படிப்பித்திருக்கின்றார்.

வங்கிகள் குறைந்த அந்தக் காலத்தில் மலாயா விலிருந்து பணம் அனுப்புபவர்கள் செட்டிகள் மூலம் திரு. காசிப்பிள்ளையின் பெயருக்கே தங்கள் பணங்களை அனுப்புவார்கள். திரு. காசிப்பிள்ளை அப்பணத்தைச் செட்டியாரிடமிருந்து வாங்கிப் பத்திரமாக வைத்து உரியவரிடம் சேமிப்பார். திரு. காசிப்பிள்ளையின் நேர்மையில் மக்கள் எந்த அளவிற்கு நம்பிக்கை வைத்தனர் என்பதையே இது காட்டுகின்றது.

பாடசாலையும் கோவிலும்

தமிழ் இனத்திற்கு – குறிப்பாகச் சைவ சமயத்த வருக்கு தொண்டு செய்வதில் தன்து வாழ்க்கையில் பெரும் பாகத்தைக் கழித்த திரு. காசிப்பிள்ளை எமது ஊரான அரியாலையை மறந்துவிடவில்லை. எமது ஊர் மக்களின் கல்வி நலன் கருதி 1913ம் ஆண்டில் **ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை**யைத் தோற்றுவித்தார். ஸ்ரீ சித்திவிநாயகர் கோவிலைப் புனருத் தாரணம் செய்வித்து 1914ம் ஆண்டில் கும்பாபிஷே கம் செய்வித்தார். இந்தியாவிலிருந்து கற்களையும் சிற்பாசாரியர்களையும் அழைப்பித்து அவர் செய்வித்த வேலை மிகவும் உறுதிப்பாடும். செம்மையும் மிக்கது. **கைலாயப்பிள்ளையார் கோவி**லைத் தவிர்ந்த யாழ்ப்பாணக் குடாநாட்டி லுள்ள வேறு எந்தக் கோவிலும் இவ்வளவு சிறப்பான உட்கட்ட வேலையைக் கொண்டி ருக்கவில்லை.

1914ஆம் ஆண்டில் தனது பதவிகளிலிருந்து இளைப்பாறி, 1936ஆம் ஆண்டு செப்டம்பர் இவ்வுலக

வாழ்வைத் துறந்த திரு . காசிப்பிள்ளையைப் பல பதவிகள் நாடிவந்தன. அவர் இறந்த சமயத்தில் அதிகாரி ஏ. நாகநாதன் கூறியது போல, "தன் நாக்கை அசைத்து நாட்டையே அசைத்த" காசிப் பிள்ளையவர்கள் அப்பதவிகளை ஏற்க விரும்ப வில்லை. சேர் வைத்திலிங்கம் துரைசாமி கூறிய தைப் போல "யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதிலும் அவர் சொன்ன வார்த்தைகளே சட்டமாகவிருந்த" காரணத்தினால் தன்னை நாடிவந்த பதவிகளில் சிலவற்றில் தனது மூத்த தமையனாரான ஆறுமுகத்தின் மக்களான கதிரவேலுவையும் கனகரத்தினத்தையும் அமர்த்தினார்.

ஒரு முக்கியஸ்தர் முன்பு ஒருமுறை கூறியது போல 'இலங்கைத் தமிழர்களின் பொது வாழ்க்கை யில் இராமநாதன் குடும்பத்திற்கு அடுத்த இடத்தைக் காசிப்பிள்ளை குடும்பம் வகித்தமைக்கு' கதிரவேலு வினதும் கனகரத்தினதும் சொந்தத்திறமை மட்டும் காரணமல்ல. காசிப் பிள்ளை அவர்களின் செல்வாக்கே பெரும் காரணமாகும்.

கதிரவேலு

1861ம் ஆண்டு பிறந்தவரும் 1889ம் ஆண்டு புரக்கிராசியாகப் பட்டம் பெற்றவருமான திரு. ஏ. கதிரவேலுவை திரு. காசிப்பிள்ளை உடனேயே தன்னுடன் சேர்ந்து கொண்டார். அவருடன் சேர்ந்த "காசிப்பிள்ளை அண்ட் கதிரவேலு புரக்கிராசிகள்" என்ற நிறுவனத்தை ஆரம்பித்தார்.

முடிக்குரிய புரக்கிராசி பதவியிலிருந்து திரு. காசிப்பிள்ளை இளைப்பாறியபோது திரு. கதிரவேலு அப்பதவிக்கு நியமிக்கப்பட்டார். திரு. காசிப்பிள்ளை யைப் போன்றே மாஜிஸ்திரேட்டாகவும் மாவட்ட நீதிபதியாகவும் பணிபுரிந்தார். முதலாவது உலக யுத்தத்தின்போது மேலதிக மாஜிஸ்திரேட்டாக நியமிக்கப்பட்டார். இறக்கும் வரையும் அப்பதவியை வகித்தார்.

திரு. காசிப்பிள்ளையைப் போன்றே சைவ பரிபாலன சபையில் அங்கம் வகித்த திரு. கதிரவேலு காசிப்பிள்ளையவர்களின் செல்வாக்கினால் யாழ்ப்பாண வழக்கறிஞர் சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். தலதாபன ஆட்சி முறை முன்னோடியாக 1917ஆம் ஆண்டில் உள்ளூர்ச் சபைகள் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட போது திரு.கதிரவேலு அச்சபையில் அங்கம் வகித்தார். மாவட்ட விதிக் குழுவிலும், மாகாண விதிக் குழுவிலும் அங்கம் வகித்த அவர் யாழ்ப்பாணத்தில் தேவைக்கு உதவும் 'நண்பர்கள் சங்கம்' ஒன்றை ஆரம்பிப்பதற்குக் காலாக இருந்தார். அரசாங்க உதவித் திட்டங்கள் அமுல் செய்யப்படாத அக்காலத் தில் ஏழைகளுக்கு உதவும் பணியை இச்சங்கம் செய்தது.

கிளைத்துப் பரந்த ஆலமரம் போல் காசிப் பிள்ளை அவர்களின் செல்வாக்கிற்குள் ஒங்கி வளர்ந்தபோதிலும் கதிரவேலுவும் கனகரத்தினமும் கிளைகளைத் தாங்கும் வெறும் விழுதுகளாக இருந்து விடவில்லை. திரு. காசிப்பிள்ளை செல்லத் தவறிய வேறு துறைகளுள் புகுந்து காசிப்பிள்ளை குடும்பத்திற்கும் பொலிவையும் நிறைவையும் ஏற்படுத்தினார்.

பத்திரிகைத் துறையில்

தமது கொள்கைகளையும் கருத்துக்களையும் பரப்புவதற்கு சைவ பரிபாலன சபையினர் ஆங்கிலத் திலும் தமிழிலும் ஆரம்பித்து நடத்திய "இந்து சாதனம்" என்ற பத்திரிகையின் முதலாவது ஆசிரியப் பொறுப்பை திரு.கதிரவேலு ஏற்றார். "இலங்கைத் தேசாபிமானி" (Ceylon Paloor) என்ற ஆங்கிலப்

பத்திரிகையை விலைக்கு வாங்கி 1908 ஆம் ஆண்டில் "படித்த இலங்கையர்" தொகுதிக்கு திரு.எச்.எம்.பெர்னான்டோ என்ற சிங்களவருக்கு எதிராகப் போட்டியிட்ட பொன்னம்பலம் இராமநாதனுக்கு (அப்பொழுது அவர் 'சேர்' ஆகவில்லை) சார்பாகப் பிரசாரம் செய்தார். திரு. கனகரத்தினம் அப்பொழுது வெளிவந்து கொண்டிருந்த மற்ற ஆங்கிலப் பத்திரிகைகளான சிலோன் இன்டிப் பென்டனும் (Ceylon Independent) மோர்ணிங் லீடரும் (Morning Leader) திரு. எச்.எம். பெர்னாண்டோவிற்காகப் பிரசாரம் செய்தன. அந்த இரு பத்திரிக்கைகளின் பிரசாரத்திற்கும் திரு. கனகரத்தினம் தனது பத்திரிகையில் பதிலிறுத்த தோடல்லாமல் தனது பத்திரிகையின் பிரதிகளைச் சிங்களவருக்கு இலவசமாக அனுப்பி வைத்தார்.

சுதேசிய திருநாட் கொண்டாட்டம்

திரு. காசிப்பிள்ளையைப் போன்றே கதிரவேலுவும் கனகரத்தினம் அவர்களும் எமது ஊரின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டினர். எமது ஊர் இளைஞர்கள் வாசித்துத் தமது கல்வி அறிவை வளர்த்துக் கொள்வதற்காக ஒரு வாசிகசாலையை ஆரம்பிப்பதில் திரு. கதிரவேலு அதிக அக்கறை காட்டினார். அவரின் முயற்சியின் பெயரிலேயே சரஸ்வதி வாசிகசாலை ஆரம்பிக்கப்பட்டது. இளம் சந்ததியினரின் முன்னேற்றத்தில் ஆர்வம் காட்டிய அவர் இலக்கியச் சங்கம் ஒன்றையும் ஆரம்பித்தார். ஞாயிற்றுக் கிழமைகளில் இளைஞர்கள் அவரின் தலைமையில் கூடி பல விடயங்களையும் பற்றி விவாத்தித்தனர். சுதேசிய திருநாட் கொண்டாட்டத்தை ஆரம்பிப்பதற்குக் காலாக இருந்தவரும் அவர்தான். 1919ஆம் ஆண்டு தொடக்கம் அவர் இறக்கும் வரையும் சுதேசிய திருநாட் கொண்டாட்டங்களுக்கு அவர்தான் தலைமை வகித்தார். சமாதான நீதவானாக இருந்த அவர், அரிசனங்களின் முன்னேற்றத்திலும் ஊக்கம் காட்டினார். அரிசனங்களுக்கென ஒரு பாடசாலையைக் கட்டுவித்து வித்தியா விருத்திச் சங்கத்திடம் ஒப்படைத்தார்.

ஸ்டான்லி கல்லூரி

1871 ஆம் ஆண்டில் பிறந்தவரும் கல்கத்தாவில் கல்வி கற்றவரும் புராக்கிராசியுமான கனகரத்தினம் அவர்களும் எமது கிராமத்தின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டியவர். அன்றைய சூழ்நிலையில் ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்த அவர் எமது ஊர்மக்களும் ஆங்கிலக் கல்வியைப் பெறவேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன் 1928ஆம் ஆண்டில் தன் சொந்தக் காணியில் ஸ்டான்லி கல்லூரியைக் (கனகரத்தினம் மகா வித்தியாலயம்) கட்டுவித்து கவர்னரைக் கொண்டு திறப்பித்து அரசாங்கத்திடம் ஒப்படைத்தார். ஸ்ரீ சித்திவிநாயகர் கோவிலையும் ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையையும் அவர்தான் மேற்பார்வை செய்தார்.

திரு.கனகரத்தினம் அவர்கள் அகில இலங்கை ரீதியில் செயற்பட்டதற்கும் செல்வாக்குப் பெற்றமைக்கும் திரு. காசிப்பிள்ளையின் அபரிமிதமான செல்வாக்குத்தான் பிரதான காரணம். 1908ஆம் ஆண்டு பொன்னம்பலம் இராமநாதனுக்காகப் பிரசாரம் செய்வதற்கு 'சிலோன் பேட்ரியட்' பத்திரிகையை வாங்கி திறம்பட நடத்தித் தனக்கெனப் பெரும் புகழ் சம்பாதித்துக் கொண்ட திரு. கனகரத்தினம் 1920 ஆம் ஆண்டு இலங்கை ஒன்பது தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டபோது வடமாகாணத்திற்கான தொகுதியில் சேர் வைத்திலிங்கம் துரைசாமியை எதிர்த்துப் போட்டியிட்டார். வெகு சொற்ப வாக்குகளால் அவர் தோல்வியுற்றார். புதிய தொகுதி நிர்ணயத்தையடுத்து 1923ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் வடமாகாணத் தெற்குத்

தொகுதியில் நிர்வாக சபை உறுப்பினராகப் பணிபுரிந்தவரும் பத்தாண்டு காலத்திற்குமேல் நியமன அங்கத்தவராக இருந்தவருமான சேர் அம்பலவாணர் கனகசபையைத் தோற்கடித்தார்.

சேர் பொன்னம்பலம் இராமநாதனின் ஆதரவாளரான திரு.கனகரத்தினம் அந்தக் காலத்தில் பிரபல்யம் பெற்ற பல விவாதங்களில் கலந்து கொண்டார். இலங்கைப் பல்கலைக்கழகத்தைக் கொழும்பில் அமைப்பதா அல்லது பேராதனையில் அமைப்பதா என்ற பெயர் பெற்ற விவாதத்தில் சேர் பொன்னம்பலம் இராமநாதனுடன் சேர்ந்து கொழும் பிற்காக வாதாடினார். மற்ற எல்லாத் தமிழ்த் தலைவர்களும் பேராதனையை ஆதரித்தனர். 1927 ஆம் ஆண்டு கொழும்பில் டவர் மண்டபத்தில் நடைபெற்ற முதலாவது அகில இலங்கை தமிழ் மாநாட்டிற்குத் தலைமை வகித்த திரு . கனகரத்தினம் 1923ஆம் ஆண்டில் யாழ்ப்பாண நகர சபை ஆரம்பிக்கப்பட்டபோது அதன் முதலாவது தலைவராகக் கடமையாற்றினார்.

கூட்டுறவுத் துறையில்

இந்த மூன்று தலைவர்களினதும் புகழை அவர்கட்குப் பின் வந்தோர் மிஞ்ச முடியாது போயினும் ஓரளவிற்குப் பாதுகாத்தனர். காசிப் பிள்ளை அவர்களின் மகனான அப்புக்காத்தர் அருளம்பலம், அரசியலில் அதிகம் ஈடுபாடு கொண்டிராத போதிலும், தனது மூத்தோர் தொடங்கிய பணிகளைச் செவ்வனே செய்ததோடு கூட்டுறவு இயக்கத்தை யாழ்ப்பாணத்தில் பரப்புவதற்காக அயராது உழைத்தார். யாழ்ப்பாணக் கூட்டுறவு இயக்கத்தின் செயலாளராகவும், கூட்டுறவு வங்கியின் செயலாளராகவும் அவர் ஆற்றிய பணியைப் போற்றும் முகமாகக் கூட்டுறவு இயக்கத் திற்கு அவர் செய்த தொண்டிற்காகவே சமாதான நீதிவான் பட்டம் அவருக்குக் கொடுக்கப்பட்டது.

இந்துக் கல்லூரியிலும் றோயல் கல்லூரியிலும் கல்வி கற்று அப்புக்காத்துப் பரீட்சைகளில் முதன்மையாகத் தேறிய அப்புக்காத்தர் தனது தந்தையாரான காசிப்பிள்ளையின் சைவமதப் பற்றைப் பெருமளவில் பெற்றார் : "சைவப் பழம்" என்ற பட்டத்தைப் பெற்ற அவர் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியின் சபையின் செயலாளராகவும் கடமையாற்றியவர். அவரில்லாத சைவ மாநாடுகள் யாழ்ப்பாணத்தில் நடப்பதே அரிது. சைவ ஆகம முறைகளை நன்றாகக் கற்றிருந்த அப்புக்காத்தர் கோவில் விசாரணைக் கமிஷனிலும், உள்ளூர் சபையிலும் பின்பு யாழ்ப்பாண நகர சபையிலும் அங்கம் வகித்தவர். திரு. எம்.எஸ். இளைய தம்பியுடன் சேர்ந்து வை.எம்.எச்.ஐ. "இளம் இந்து வாலிபர்களின் சங்கம்" உருவாக்கினார். ஆனால் அந்த முயற்சி அதிகம் வெற்றியளிக்கவில்லை.

வைத்தியத்துறையில்

ஸ்ரீ சித்திவிநாயகர் கோவிலையும், ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையையும் நிர்வகிக்கும் வேலைகளைச் செவ்வனே செய்த அப்புக்காத்தரைப் போன்று டாக்டர் கந்தையாவும் உள்ளூர் விடயங்களில் அதிக அக்கறை காட்டினார். அரியாலை சனசமூக நிலையத்தின் ஆரம்பகாலத் தலைவராக இருந்த அவர் யாழ்ப்பாணச் சுகாதார லீக்கை ஆரம்பித்து வைத்ததோடு யாழ்ப்பாணப் பிரதேச ஆஸ்பத்திரிகைகளின் சுப்ரீன்டனாகப் பணிபுரிந்தார். "இரவு விருந்துகளின் பின்பு சிறந்த முறையில் நகைச் சுவையுடன் பேசும் பேச்சாளர்" என்று சேர் ஜோன் கொத்தலாவவை அவர்களால் பாராட்டைப் பெற்றவர்.

திரு.பி. காசிப்பிள்ளை நீண்டகாலம் கொழும்புத் துறை வட்டாரத்தின் பிரதிநிதியாக யாழ்ப்பாண நகர

சபையிலும் பட்டின சபையிலும் அங்கம் வகித்த தோடு யாழ்ப்பாணத்தின் மேயராகவும் கடமை யாற்றியவர். புரக்கிராசியாகத் தொழில் புரிந்து செல் வாக்குடன் வாழ்ந்த அவர் பெரிய காசிப்பிள்ளை யைப் போன்று நேர்மைக்குப் பெயர் பெற்றவர்.

திரு.சி.சிற்றம்பலம் கனகரத்தினம் அவர்களின் வழியில் சென்று இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தின் முதலாவது மந்திரி சபையில் அங்கம் வகித்தவர். றோயல் கல்லூரியில் கல்வி கற்கும்போது மிகச் சிறந்த மாணவனாகத் திகழ்ந்த தோடு பல பரிசில்களையும் பெற்ற திரு சிற்றம்பலம் உபகாரச் சம்பளம் பெற்று கேம்பிரிஜ் பல்கலைக் கழகத்திற்குச் சென்று உயர்கல்வி கற்றார். இலங்கை சிவில் சேவைப் பரீட்சையில் சித்தியெய்தியதன் பின்பு இலங்கை திரும்பிப் பல உயர் பதவிகளை வகித்த திரு. சிற்றம்பலம், மன்னார் அரசாங்க அதிபர் பதவி யிலிருந்து இளைப்பாறிவிட்டு 1947ஆம் ஆண்டில் மன்னார்த் தொகுதிக்குப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1947ஆம் ஆண்டு தொடக்கம் 1952ஆம் ஆண்டு வரையும் தபால் அமைச்சராகப் பணி புரிந்த அவர் 1956ஆம் ஆண்டு வரையும் மன்னார்த் தொகுதிப் பிரதிநிதியாக இருந்தார்.

அரசியல் துறையில் பணிபுரிந்து எமது ஊருக்குப் புகழ் ஈட்டிக் கொடுத்த வேறு மூவரை யும் நாம் குறிப்பிடத்தான் வேண்டும். யாழ்ப்பாண மேயர் பதவியை வகித்த திரு. சி.பொன்னம்பலமும், திரு. சி. காசிப்பிள்ளையும், திரு.எஸ்.சி.மகா தேவாவுமே அவர்களாவர்.

யாழ்ப்பாண நகரசபையின் இறுதித் தலைவரும், யாழ். முனிசிப்பல் சபையின் இரண்டாவது மேயரு மான திரு. பொன்னம்பலம் அரியாலை வட்டாரத் தின் பிரதி நிதியாக மட்டுமல்ல. நாயன்மார்கட்டு வட்டாரத்தின் பிரதிநிதியாகவும் பணியாற்றியவர். தலை சிறந்த அப்புக்காத்தாக யாராலும் போற்றப்படும் அவர் தனது இளமைப் பருவத்தில் இலங்கை தேசிய காங்கிரசின் வாலிப இயக்கத்திலும் பங்கு கொண்டவர். யாழ்ப்பாண அரசியலைப் பொறுத்தவரையில் இன்றும் மிகுந்த செல்வாக்குடையவராயிருக்கும் திரு. பொன்னம் பலம் "யாழ்ப்பாணத்தின் மேயர்களை ஆக்குபவர்" என்று யாராலும் புகழப்படுபவர்.

யாழ்ப்பாண மேயராகப் பணிபுரிந்த திரு. எஸ்.சி.மகாதேவா தமிழரசுக் கட்சியில் மிகவும் செல்வாக்குள்ளவராக இருக்கின்றார். சுதேசிய திருநாட் கொண்டாட்டத்தின் வெள்ளி விழாவிற்குத் தலைமை தாங்கிய அவர் அரியாலை சனசமூக நிலையத்தின் தலைவராக நீண்டகாலம் பணி புரிந்தவர்.

திரு. வி. காசிப்பிள்ளை காலம் தொடக்கம் இன்று வரையும் எமது ஊர் யாழ்ப்பாண அரசியலில் மிகவும் செல்வாக்குப் பெற்று விளங்கி வருகிறது. யாழ்ப்பாணத்தில் இதுவரை மேயராகப் பதவி வகித்தவர்களில் மூவர் எமது ஊரைச் சேர்ந்தவர் கள். இது உண்மையில் பெருமைப்பட வேண்டியதே.

(1669 ஆம் ஆண்டு
பொன்விழா மலரிலிருந்து)

கடந்த வருடங்களின்

சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின்

பதவியாளர்கள்

வரு.	விழா	தலைவர்	செயலாளர்	பொருளாளர்
			பொன்விழா	
1969	50	Dr. A. சிற்றம்பலம்	த. ஆலாலசுந்தரம் E.K.குமரையா	பொ. இராமநாதன்
1970	51	கா. கணேசன் கா. சுப்பிரமணியம்	S.M. ரஞ்சன் அ. உபயசேகரம்	த. சேனாதிராசா இ. ஸ்ரீதரன்
1971	52	V. A. கனகசிங்கம் சி. இரவீந்திரன்	S.M. ரஞ்சன் செ. கனகசபாபதி	சி. சுந்தரலிங்கம் சி. சோமபாலன்
1972	53	சி. சதானந்தன் வீ. கதிரவேலு	பொ. விஜயரட்ணம் சோ. குமரகுரு	சி. சுந்தரலிங்கம் கு. ஸ்ரீதரன்
1973	54	சி. க. சுப்பிரமணியம் சி. குலதுங்கம்	S.M. ரஞ்சன் வை. பிரபாகரன்	த. சோதிராசா சி. தேவராசா
1974	55	சி. சுந்தரலிங்கம் ம. இராமநாதன்	வை. பிரபாகரன் ச. உருத்திரேஸ்வரன்	ந. விஜயேந்திரன் செ. பாலசுந்தரம்
1975	56	Dr. ஸ்ரீவிக்கினேஸ்வரா ச. முத்துச்சாமி	ச. உருத்திரேஸ்வரன் கா. லோகேஸ்வரன்	சி. சுந்தரலிங்கம் ச. விஜயேந்திரன்
1976	57	த. மயில்வாகனம் வே. தர்மலிங்கம்	கா. லோகேஸ்வரன் நா. லோகேந்திரன்	வை. கனகரத்தினம் செ. சேனாதிராசா
1977	58	க. பாலசுந்தரம் ப. மாணிக்கராசா	கா.லோகேந்திரன் ம. சுகுமார்	செ.சேனாதிராசா கு. மதிசூடி
1978	59	கா. கணேசன் மு. சீவரத்தினம்	ம. சுகுமார் கா. லோகேஸ்வரன்	தி. செல்வரத்தினம் சோ. ஸ்ரீகுமார்
			வைரவிழா	
1979	60	கா. கணேசன் தா. சோமசேகரம்	எஸ். லோகேஸ்வரன் செ. நடராசா	N. விஜயகுமார் செ. அருளம்பலம்
1980	61	செ. பதீமநாதன்	ந. நேதாஜி	த. சற்குமார்
1981	62	ந. கிருஷ்ணசிங்கம் த. சபாரட்ணம்	பா. முரளிதரன் கு. கருணாசலதேவா	செ. சேனாதிராசா சோ. அருளிதாஸ்
1982	63	ச. சத்தியமூர்த்தி	ம. அ. ஸ்ரீராஜலிங்கம்	த. சர்வேந்திரா
1983	64	ந. வாமசிவன் மு. வேதநாயகம்	ந. கிருஷ்ணசிங்கம் த. நாகேந்திரா	அ. ரவிச்சந்திரன் அ. சபேசன்
1984 1985	65 66	நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக விழா நடைபெறவில்லை		
1986	67	கா. குணரத்தினம்	ஆ. சண்முகநாதன்	சு. குருபரன்

1987	68	ப. கணபதிப்பிள்ளை	ஆ. குணரத்தினம்	பி. நவரட்ணராசா
1988	69	நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக விழா நடைபெறவில்லை		
1989	70			
1990	71	ந. கிருஷ்ணசிங்கம்	சு. பிரபாங்கன்	சி. யோகநாதன்
		திருமதி. பா. வேல்முருகு	ஆ. சண்முகநாதன்	ம. கதிர்காமநாதன்
		எஸ். ரி. கணநாதன்	எஸ். சி. செல்வராசா	எஸ்கேசண்முகலிங்கம்
1991	72	செ. பதீமநாதன்	கா. லோகேஸ்வரன்	எஸ். சதானந்தபோதம்
1992	73	S.T.பதீமநாதன்	கா. லோகேஸ்வரன்	வி.கே. சண்முகலிங்கம்
1993	74	எஸ். கே. இராசரத்தினம்	க. மகேஸ்வரன்	த. சதானந்தன்

பவள விழா

1994	75	செ. பதீமநாதன்	எஸ். ரி. கணநாதன்	கா. லோகேஸ்வரன்
1995	76	க. பாலசுந்தரம்	ச. உருத்திரேஸ்வரன்	த. சதானந்தன்
1996	77	கா. குணரத்தினம்	ச. உருத்திரேஸ்வரன்	த. சதானந்தன்

(இடப்பெயர்வு காரணமாக வரணி ம. மி. வித்தியாலயத்தில் நடைபெற்றது)

1997	78	மு. மயில்வாகனம்	த. பஞ்சலிங்கம்	ஆ. திருலோகஸ்வரா
1998	79	மு. விஸ்வநாதன்	சூ. அகிலன்	ச. செந்தூரன்

அமுத விழா

1999	80	சு. மோகனதாஸ்	த. குணரத்தினம்	ப. புஸ்பராசா
2000	81	ச. உருத்திரேஸ்வரன்	பொ. நடராசா	இ. சடகோபன்
2001	82	ச. உருத்திரேஸ்வரன்	பொ. நடராசா	இ. சடகோபன்
2002	83	பொ. நடராசா	ஜ. சங்கர்	இ. சடகோபன்
2003	84	ஆ. தேவராசா	யோ. முகுந்தன்	ப. மோகனஜித்
2004	85	வி. கே. சண்முகலிங்கம்	மு. விசுவநாதன்	த. ஹரிசானந்
2005	86	க. மயில்வாகனம்	சரா. புவனேஸ்வரன்	இ. ப. மோகனஜித்
2006	87	பொ. பஞ்சலிங்கம்	இ. சடகோபன்	மு. தனபாலசிங்கம்
2007	88	க. கனகசபாபதி	த. ஹரிஹரன்	வி. பாலகுபன்
2008	89	மு. தனபாலசிங்கம்	வி. பாலகுபன்	கு. பிரதீபன்
2009	90	அ. உபயசேகரம்	இ.ப.மோகனஜித்	வி. பாலகுபன்
2010	91	S.C.செல்வராஜா	த. ஹரிஹரன்	ந.சுரேன்
2011	92	த.செல்வரத்தினம்	சி.ஆறுமுகதாசன்	த.கஜராஜ்

93 - ஆவது - rd அரியாலை சுதேசிய தினநாட் கொண்டாட்ட விழா - 2012

Ariyalai National Day Celebration

முன்னோடி விளையாட்டு நிகழ்வுகளுக்கு அனுசரணை வழங்கியோர் விபரம்

1) **கரப்பந்தாட்டம்** (Setup) யாழ் மாவட்டம்

அமரர் சோதிநாதன் சிவசுந்தரம் ஞாபகார்த்தமாக அவரது பிள்ளைகள் - லண்டன்

2) **கரப்பந்தாட்டம்** (Over game) **(உள்ளூர்)**

அமரா தம்பிமுத்து நல்லதம்பி ஞாபகார்த்தமாக அவரது புதல்வர்கள் நகுலராஜ், றகுலராஜ், திலகராஜ், மனைவி - பரமேஸ்வரி

3) **வலைப்பந்தாட்டம்** - பெண்கள் - **(உள்ளூர்)**

அமரர் சிவசுந்தரம் இராசம்பாள் ஞாபகார்த்தமாக அவரது பிள்ளைகள் - லண்டன்

4) **எறிபந்தாட்டம்** (12 Overs) **(உள்ளூர்)**

அமரர் I.S.சண்முகநாதன் ஞாபகார்த்தமாக திருமதி வாலம்பிகை சண்முகநாதன், அரியாலை, யாழ்ப்பாணம்.

5) **தாச்சிப் போட்டி ஆண்கள் உள்ளூர்**

அமரர் தம்பிமுத்து செல்வரத்தினம் (லண்டன்)

6) **தாச்சிப் போட்டி ஆண்கள் உள்ளூர்**

அமரர் இராமநாதன் - கனகாம்பிகை ஞாபகார்த்தமாக இராமநாதன் சடகோபன்

7) **கெந்தி அடித்தல் (ஆண்கள்) (உள்ளூர்)** Dr. யோகரத்தினம் சயந்தன், 6, கனகரத்தினம் வீதி, அரியாலை.

8) **கயிறு (பெண்கள்) (உள்ளூர்)** அமரர். சின்னத்தம்பி செல்லத்துரை ஞாபகார்த்தமாக திரு.செல்லத்துரை றதீஸ்குமார், 163, கண்டி வீதி, அரியாலை.

9) **கிடுகுபின்னுதல் - பெண்கள் (பொது)**

திரு. சின்னத்தம்பி ஆனந்தசுந்தரம், சின்னலாங்கண்டு ஒழுங்கை, அரியாலை.

10) **08 கி.மீ. வீதி ஓட்டம் (ஆண்கள்) (பொது) (உள்ளூர் ரீதியாக)**

அமரர் கோசலராணி திருலோக ஈஸ்வரா ஞாபகார்த்தமாக திலோக ஈஸ்வரா துவாரகை

11) **08 கி.மீ சைக்கிள் ஓட்டம் (பெண்கள்) (பொது) (உள்ளூர் ரீதியாக)**

அமரர் னுச. கந்தையா பாலசிங்கம் ஞாபகார்த்தமாக பாலசிங்கம் குடும்பம்

12) **15 கி.மீ. சைக்கிள் ஓட்டம் (ஆண்கள்) (பொது) (உள்ளூர் ரீதியாக)**

நந்தன புதுவருடப்பிறப்பன்று (13.04.2012) வெள்ளிக்கிழமை நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளுக்கான பரிசில்களை அன்பளித்தோர் விபரம்

போட்டி	ஞாபகார்த்தமாக	அன்பளிப்பவர் பெயர், முகவரி
1.100மீ ஓட்டம் 13 வயதின் கீழ் (ஆண்)	அமரர் பஞ்சரத்தினம் ஜனார்த்தனன்	குடும்பத்தினர் 20, கதிரவேலு ஒழுங்கை அரியாலை.
2.100மீ ஓட்டம் 13 வயதின் கீழ் (பெண்)	————	பகலவன் பல்பொருள் வாணிபம் 494, கண்டி வீதி தபால்கட்டைச் சந்தி, அரியாலை.
3.100மீ ஓட்டம் 16 வயதின கீழ் (ஆண்)	அமரர் கந்தையா கனகசபை	திரு. கனகசபை மோகனதாஸ் 588/1, நாவலர் வீதி, அரியாலை.
4.100மீ ஓட்டம் 16 வயதின் கீழ் (பெண்)	————	திரு.சி.பாலசிங்கம் (திருக்குமரன்) கண்டி வீதி, அரியாலை.
5.100மீ ஓட்டம் 19 வயதின் கீழ் (ஆண்)	அமரர் பொன்னையா பத்மநாதன்	குடும்பத்தினர். 125, ஆனந்தன் வடலி வீதி, அரியாலை.
6. 100மீ ஓட்டம் 19 வயதின் கீழ் (பெண்)	அமரர் பரமசாமி சேதுப்பிள்ளை	திருமதி சி.சண்முகலிங்கம் பரமேஸ்வரி, 422 நாவலர் வீதி, அரியாலை.
7. 100மீ ஓட்டம் 19 வயதின் மேல் (ஆண்)	அமரர் பரமசாமி சேதுப்பிள்ளை	திருமதி சி.சண்முகலிங்கம் பரமேஸ்வரி, 422 நாவலர் வீதி, அரியாலை.
8.100மீ ஓட்டம் 19 வயதின் மேல் (பெண்)	அமரர் திருமதி பற்றிமா பற்றீசியா	திரு.குமாரையா ரவீந்திரகுமார் 99/6 சந்தனமாத கோவில் ஒழுங்கை
9. 50மீ ஓட்டம் 10 வயதின் கீழ் (ஆண்)	அமரர் சுப்பிரமணியம் இதயராஜ்	சுப்பிரமணியம் குடும்பத்தினர் 62/2, இலந்தைக் குளம் வீதி அரியாலை.
10. 50மீ ஓட்டம் 10 வயதின் கீழ் (பெண்)	----------	பிரபா களஞ்சியம் 118, நெடுங்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

போட்டி	ஞாபகார்த்தமாக	அன்பளிப்பவர் பெயர், முகவரி
11. 1500மீ ஓட்டம் ஆண்கள் (பொது)	அமரர்கள் சத்தியமூர்த்தி சத்தியமூர்த்தி பிரசாந்தி	சத்தியமூர்த்தி சிவகுமார் சேயூரன், சேயோன், கனடா.
12. மூன்று கால் ஓட்டம் 19 வயதின் கீழ் (ஆண்)	அமரர் மகேஸ்வரி தாமோதரம்பிள்ளை	திரு விஜயரத்தினம் மதனன், 5/1, புறூடி ஒழுங்கை, அரியாலை.
13. பாலர் ஓட்டம் 5 வயதின் கீழ் (ஆண், பெண்)	அமரர் சுப்பையா நாகராசா	குடும்பத்தினர் 484, கண்டி வீதி, அரியாலை.
14. முதியோர் ஓட்டம் 50 வயதின் மேல் (ஆண்கள்)	அமரர் பொன்னம்பலம் இராஜரத்தினம்	திரு.S.பாலச்சந்திரன் (உதயன்) 48, நாவலர் வீதி, அரியாலை.
15. 75மீற். ஓட்டம் 35 வயதின் மேல் (பெண்கள்)	அமரர் சுப்பிரமணியம் கௌசிகன்	சுப்பிரமணியம் குடும்பத்தினர் 62/2, இலந்தைக்குளம் வீதி, அரியாலை.
16. தடை ஓட்டம் ஆண்கள் (பொது)	அமரர் சோமசுந்தரம் உதயராசா	உதயராசா குடும்பம், 64, பொன்னம்பலம் வீதி, அரியாலை.
17. 4 x100 மீற். அஞ்சல் ஓட்டம் ஆண்கள் (பொது)	அமரர் லலிதா சண்முகலிங்கம்	திரு.V.K.சண்முகலிங்கம் 125, திருமகள் வீதி, அரியாலை.
18. 4 x200 மீற் அஞ்சல் ஓட்டம் 16வயதின் கீழ் (ஆண்கள்)	அமரர் தம்பு சண்முகசுந்தரம்	குடும்பத்தினர் 51/1, இலந்தைக்குளம் வீதி, அரியாலை.
19. சங்கீதக் கதிரை சிறார்களுக்கானது	அமரர் தம்பு குணரத்தினம்	திரு.குணரத்தினம் கோபிரமணன் 32/1 கனகரத்தினம் வீதி, அரியாலை.
20. சங்கீதக் கதிரை திருமணமான பெண்கள்	அமரர் நாகராஜா நவமணி	ஏகாம்பரம் குடும்பம் 149, கண்டி வீதி, அரியாலை.

போட்டி	ஞாபகார்த்தமாக	அன்பளிப்பவர் பெயர், முகவரி
21. சங்கீதக் கதிரை 13 வயதின் மேல் பெண்கள்	----------	குச்சான் வெல்டிங், 149, கண்டி வீதி, அரியாலை
22. சங்கீத கதிரை 13 வயதின் கீழ் பெண்கள்	அமரர் பரமசாமி கனகம்மா	திரு.ப.துரைராஜா கண்டி வீதி, அரியாலை
23. கயிறு இழுத்தல் இளைஞர்கள் எதிர் சம்சாரிகள்	அமரர் வைரமுத்து சின்னத்துரை (கிளி)	திருமதி முத்தம்மா சின்னத்துரை 10/2 நடுத்தெரு ஒழுங்கை அரியாலை.
24. கயிறு இழுத்தல் செல்விகள் எதிர் திருமணமான பெண்கள்	அமரர் திருமதி பத்மாசனி இராசையா அமரர் செல்வி முத்தையா தவமணி	சிவபாதசிங்கம் சாவித்திரி குடும்பம் 58, ஆ.வ. வீதி, அரியாலை.
25. வினோத ஆடை பாலர்	----------	Dr. ஸ்ரீ.விக்னேஸ்வரா சிவசக்தி வைத்திய நிலையம், கண்டி வீதி, அரியாலை
26. வினோத ஆடை 16 வயதின் கீழ் தனி/ குழு	----------	திரு.ம.கதிர்காமநாதன் கனகரத்தினம் வீதி, அரியாலை.
27. வினோத ஆடை 16 வயதின் மேல் தனி/ குழு	----------	திரு.செ.பத்மநாதன் ஆ.வ.வீதி, அரியாலை.
28. வழு மரம் ஏறல் பொது (ஆண்கள்)	அமரர் பொ.கனகரத்தினம் ஜெகதீஸ்வரன் (ஜெகன்)	பொ.கனகரத்தினம் குடும்பத்தினர், 35, விபுலானந்தர் வீதி, அரியாலை.
29. தலையணைச் சண்டை பொது (ஆண்கள்)	அமர் கண்ணன் (கருணாநிதி)	திரு.த.தர்மேந்திரா (தர்மசன்ஸ்) 9, வேலப்பர் ஒழுங்கை, கனகரத்தினம் வீதி, அரியாலை.

93ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா - 2012

கலைப் போட்டிக்கான பரிசில்களை அன்பளித்தோர் விபரம்

போட்டி	ஞாபகார்த்தமாக	அன்பளிப்பவர் பெயர், முகவரி
✡ க.பொ.த. (உத) - 3A	அமரர் வீ. அப்பாத்துரை	திரு. அ.உபயசேகரம், 169/1, கண்டி வீதி, அரியாலை.
மொழித்திறன் (தமிழ்) ஆரம்பப்பிரிவு	அமரர் பொன்னம்பலம் தவநாதன்	திரு.தவநாதன் ஹரிஷாந், நாவலர் வீதி, அரியாலை.
மொழித்திறன் (தமிழ்) கீழ்ப்பிரிவு	அமரர்.ச.த.கணநாதன்	திரு.ச.த.பத்மநாதன் 169, கண்டிவீதி, அரியாலை.
மொழித்திறன் (தமிழ்) மத்தியபிரிவு	அமரர் நாகலிங்கம் தியாகராசா	திரு.பி.மயூரன் 125/30, ஆனந்தன் வடலி வீதி, அரியாலை.
மொழித்திறன் (தமிழ்) மேற்பிரிவு	அமரர். Dr. ச.அருளம்பலம்	திருமதி சரஸ்வதி அருளம்பலம் 66, அருளம்பலம் ஒழுங்கை, அரியாலை
மொழித்திறன் (ஆங்கிலம்) ஆரம்பபிரிவு	———	Dr. குருநாதர் திருமகள் 13/03, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, அரியாலை.
மொழித்திறன் (ஆங்கிலம்) கீழ்ப்பிரிவு	அமரர் திருமதி கனகாம்பிகை அற்புதராசா	திரு.அ. பரமராஜா 50, அருளம்பலம் ஒழுங்கை, அரியாலை.
மொழித்திறன் (ஆங்கிலம்) மத்தியபிரிவு	———	திரு. N. பாக்கியநாதன் 14, சின்னலாங்கண்டு ஒழுங்கை, அரியாலை.
மொழித்திறன் (ஆங்கிலம்) மேற்பிரிவு	அமரர் திருமதி கனகாம்பிகை இராமநாதன்	திரு. இராமநாதன் சடகோபன் 30/21, நிக்கலஸ் லேன், அரியாலை.
கவிதை (தமிழ்) மத்தியபிரிவு		திரு.வ. புவனேந்திரன் இல. 56, முள்ளி ஒழுங்கை, அரியாலை.
கவிதை (தமிழ்) மேற்பிரிவு	அமரர் சின்னையா கதிரவேலு	திருமதி மேகலா விக்ரர் விஜயநாதன் 108, கலைமகள் வீதி, அரியாலை.

போட்டி	ஞாபகார்த்தமாக	அன்பளிப்பவர் பெயர், முகவரி
சிறுகதை (தமிழ்) ஆரம்ப பிரிவு	அமரர் செல்லப்பா சண்முகநாதன்	திரு. ம. சசிகுமார் 4, கனகரத்தினம் வீதி, அரியாலை.
சிறுகதை (தமிழ்) கீழ்ப் பிரிவு	————	திரு. ச.பொன்னுத்துரை 49, விபுலானந்தர் வீதி, அரியாலை.
சிறுகதை (தமிழ்) மத்திய பிரிவு	அமரர்கள் தம்பிப்பிள்ளை திருமதி சித்திரா தனராஜா	திரு. த. துரைசிங்கம் நாவலர் வீதி. அரியாலை.
சிறுகதை (தமிழ்) மேற்பிரிவு	அமரர் சி.சண்முகசுந்தரம்	குடும்பத்தினர், நாவலர் வீதி. அரியாலை.
பொது அறிவும்விவேகமும் ஆரம்பப்பிரிவு	அமரர் இ.யசோதரன் (தவில் வித்துவான்)	புதல்வர்கள் 156, ஆ.வ. வீதி, அரியாலை
பொது அறிவும்விவேகமும் கீழ்ப்பிரிவு	அமரர் தம்பிப்பிள்ளை பரமசிவம்	பரமசிவம் குடும்பம் 25/5, ஆனந்தம் வடலி வீதி, அரியாலை.
பொது அறிவும்விவேகமும் மத்தியபிரிவு	அமரர் கிறிஸ்தோத்திரம் விக்ரர் விஜயநாதன்	திருமதி மேகலா விக்ரர் விஜயநாதன் 108, கலைமகள் வீதி, அரியாலை.
பொது அறிவும்விவேகமும் மேற்பிரிவு	அமரர் சபாபதிப்பிள்ளை நடேசர்	குடும்பத்தினர், 740, நாவலர் வீதி, அரியாலை.
சமய அறிவும் திருக்குறளும் ஆரம்பிரிவு	அமரர் ஐயம்பிள்ளை சத்தியமூர்த்தி	குடும்பத்தினர் 105, சந்தனமாதா ஒழுங்கை, கொழும்புத்துறை.
சமய அறிவும் திருக்குறளும் கீழ்பிரிவு	————	திரு. ப. புஸ்பராசா கதிரவேலு ஒழுங்கை, அரியாலை
சமய அறிவும் திருக்குறளும் மத்தியபிரிவு	————	திரு.K. ஜெயபாலன், 79, கனகரத்தினம் வீதி, அரியாலை.
சமய அறிவும் திருக்குறளும் மேற்பிரிவு	————	திரு. கு. பாஸ்கரன் நாவலடி. அரியாலை
சித்திரம் ஆரம்பபிரிவு	அமரர் தம்பிப்பிள்ளை கூடாமணி	திரு. கூடாமணி அகிலன் 203/2 , கண்டி வீதி, அரியாலை.

போட்டி	ஞாபகார்த்தமாக	அன்பளிப்பவர் பெயர், முகவரி
சித்திரம் கீழ்பிரிவு	அமரர் திருமதி வசந்தகுமாரி செல்வராசா	திரு. S.C. செல்வராசா 847, நாவலர் வீதி, அரியாலை.
சித்திரம் மத்தியபிரிவு		திரு. சி.சிவலிங்கம் (ரவி) 39, சந்தனமாதா ஒழுங்கை, அரியாலை.
சித்திரம் மேற்பிரிவு	அமரர் பே. சிவஞானம்	திரு. S. கலைநேசன் 51, மலர்மகள் வீதி, அரியாலை.
பேச்சு (ஆங்கிலம்) ஆரம்பபிரிவு	அமரர் நா.கிருபைராஜா	குடும்பத்தினர், 14, அருளம்பலம் ஒழுங்கை, அரியாலை.
பேச்சு (ஆங்கிலம்) கீழ்ப்பிரிவு		
பேச்சு (ஆங்கிலம்) மத்திய பிரிவு		
பேச்சு (ஆங்கிலம்) மேற்பிரிவு	அமரர் Dr. மயிலு ஜெயரத்தினம்	Dr.மயிலு குணரத்தினம் 62, புங்கன்குளம் வீதி.
Recitation ஆரம்பப் பிரிவு	அமரர் மயிலு ஜெயரத்தினம்	Dr. மயிலு குணரத்தினம், 62, புங்கன்குளம் வீதி.
Recitation கீழ்ப் பிரிவு	அமரர் செல்வரத்தினம்	திருமதி. செ.அன்னலக்சுமி
Recitation மத்திய பிரிவு	அமரர் பரமு முத்துக்குமாரசாமி	குடும்பத்தினர், 50 விபுலானந்தர் வீதி,
Recitation மேற் பிரிவு	அமரர்கள் துரைசிங்கம் தேசிய நாதனும், முருகசேகரமும்	சுப்பிரமணியம் குடும்பத்தினர் 68/2, இலந்தைக்குளம் வீதி
பாப்பா மலர் (தமிழ்) பாலர்	அமரர்கள் திரு.திருமதி சபாரத்தினம்	குடும்பத்தினர் 203/2, கண்டி வீதி, அரியாலை.
பாப்பா மலர் (ஆங்கிலம்) பாலர்	அமரர் கணேசராசா சபாநாயகம்	குடும்பத்தினர் 203/2, கண்டி வீதி, அரியாலை.
சங்கீதம் ஆரம்ப பிரிவு	அமரர் செ.சுப்பிரமணியம்	திரு.சு.கமலநாதன் 40, கட்டுக்கந்தோர் ஒழுங்கை.

போட்டி	ஞாபகார்த்தமாக	அன்பளிப்பவர் பெயர், முகவரி
சங்கீதம் கீழ்ப் பிரிவு	அமரர் திருமதி பற்றிமா பற்றீசியா	திரு.குமாரையா ரவீந்திரகுமார் 99/6, சந்தனமாதா கோவில் ஒழுங்கை,
சங்கீதம் மத்திய பிரிவு	அமரர் திருமதி ஜெயா சந்திரசேகரம்	குடும்பத்தினர் 54/1, விபுலானந்தர் வீதி.
சங்கீதம் மேற் பிரிவு	அமரர்கள் க.குணரத்தினம் கு.யோகநாதன்	திரு.கு.பிரதீபன் AAC கல்வி நிறுவனம் 66, வைரவர் கோவில் வீதி
ஆக்கத்திறன் ஆரம்ப பிரிவு	----------	திரு.கந்தசாமி ஜெயா 909, நாவலர் வீதி, அரியாலை.
ஆக்கத்திறன் கீழ்ப் பிரிவு	அமரர் இரத்தினசபாபதி தவபாலன்	திரு.தவபாலன் பவானந்த் 85/9, ஆ.வ. வீதி, அரியாலை.
ஆக்கத்திறன் மத்திய பிரிவு	----------	திரு. செ.மகேந்திரன் 410, நாவலர் வீதி, அரியாலை.
ஆக்கத்திறன் மேற்பிரிவு	----------	திரு.த.யோகராசா (பச்சடி) 75, திருமகள் வீதி,
பேச்சு (தமிழ்) ஆரம்ப பிரிவு	அமரர் நா.செல்வராசா	குடும்பத்தினர் பொன்னம்பலம் ஒழுங்கை.
பேச்சு (தமிழ்) கீழ்ப்பிரிவு		செல்வி. எம். மாலிகா 42, கனகரத்தினம் வீதி
பேச்சு (தமிழ்) மத்திய பிரிவு	மறைந்த மூதாதை யோகா	திருமதி உருத்திரேஸ்வரன் விஜியராணி. (சட்டத்தரணி/பதில் நீதவான்)
பப்பா மலர் (ஆங்கிலம்) பாலர்	அமரர் தம்பிப்பிள்ளை சூடாமணி	திரு. சூடாமணி அகிலன் 205/2, கண்டி வீதி, அரியாலை.
பப்பா மலர் (தமிழ்) பாலர்	அமரர் தம்பிப்பிள்ளை சபாநாயகம்	திரு. சூடாமணி அகிலன் 205/2, கண்டி வீதி, அரியாலை.

கடந்த வருடங்களின் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் கௌரவிக்கப்பட்டோர்

வரு. விழா	கல்வி	விளையாட்டு	கலை	சமூகசேவை
2000 81	திருமதி தேவகி துரைராசா	திரு.சொ.தர்மலிங்கம்	திரு.வ. பரமசாமி திரு.ம.பூலோகசிங்கம் திரு. ஆ. தேவராசா	திரு.மௌ.தம்பிப்பிள்ளை திரு. தப்பு குணரத்தினம்
2001 82	------	------	-------	------
2002 83	------	------	-------	------
2003 84	திரு. V. சுதாகர்	செல்வி அ. ராதை	திரு. ச. சதாசிவம்	திரு. க. சண்முகலிங்கம்
2004 85	செல்வி கிருஷ்ணவேணி மயில்வாகனம்	திரு. செ. தியாகராஜா	திரு. த. பஞ்சலிங்கம	திரு. சி. சதாசிவம்
2005 86	திரு. சோ. சிவசுந்தரம்	திரு. க. நாகேந்திரம்	திரு. அ. சந்திரகுமார்	திரு. எஸ் ரி. கணநாதன்
2006 87	திரு. கா. சவுந்தரராஜா	திரு. மு. மகாதேவா	திரு. கா. பொன்னுத்துரை (பொன்சேகா)	திரு. மு. விசுவநாதன்
2007 88	செல்வி. திருமகள் சிவகுருநாதன்	திரு. த. சண்முகசுந்தரம்	திரு. த. யோகராசா	திரு. செ. மோகனரஞ்சிதன்
2008 89	திரு. த. சபாரெத்தினம்	திரு. S.S சண்முகநாதன்	திரு. த. சிவலிங்கம்	திரு. மு. குணம்
2009 90	திரு. சீ.வசந்தரூபா	திருமதி. R.மிதுலா	திரு. க. பற்குணநாதன்	திரு.S.C. செல்வராஜா
2010 91	Dr.T. சீவரட்ணம்	திரு.ஐ.தேவராசா	திரு.இ.செல்வமாணிக்கராசா	திரு.ஆ.திருலோகாஸ்வரா
2011 92	திரு.வே.இரகுருநாதன்	திரு.ந.சுரேஸ்குமார்	திரு.பொ.மகேஸ்வரன்	திரு.நா.செல்வராசா

அரியாலை

93 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா 2012

அரியாலை ஐக்கிய கழக தலைவரின் உள்ளத்திலிருந்து...

இன்று ஈழத் தமிழரின் பண்பாட்டு அம்சங்கள் அழிந்தும், மறைந்தும் வரும் நிலையில் அரியாலை வாழ் மக்களால் கொண்டாடப்படும் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் தமிழர்களின் பாரம்பரியத்தை வெளிக்காட்டும் விளையாட்டுக்கள், கலைப் போட்டிகளை நடாத்தி வருவது ஒரு ஆக்கபூர்வமான விடயமாகும்.

கடந்த காலங்களில் நிலவிய போர்ச் சூழ் நிலைகளால் பல்வேறு பாதிப்புக்களை இப்பிரதேசம் சந்தித்த போதிலும், வருடா வருடம் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவைக் கைவிடாது நடாத்தி வரும் பெருமை இப்பிரதேச மக்களின் தளராத மனவுறுத்திக்குச் சான்றாக அமைக்கின்றது.

அந்த வகையில் நான் நீண்டகாலமாக இதன் நிர்வாக சபை உறுப்பினராகவும், விளையாட்டுத் தலைவராகவும் இருந்து பின்பு 2006ம் ஆண்டில் அதாவது 87ஆம் ஆண்டு சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவிற்கு தலைமை தாங்கியுள்ளமை எனக்கு மிகவும் பெருமை அளிக்கின்றது.

இறுதியாக 93ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை அனைவரும் கண்டுகளிக்க வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனின் அருளை வேண்டுகின்றேன்.

திரு. பொ. பஞ்சலிங்கம் J.P.

(ஓய்வுபெற்ற விமானப்படை உத்தியோகத்தர்)

நன்றிகள்

- 93ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா சிறப்புற பண உதவி புரிந்தவர்கட்கும், பரிசில்கள் அன்பளிப்புச் செய்தவர்கட்கும்.
- இம்மலருக்கு ஆசிச்செய்தி, வாழ்த்துச் செய்தி வழங்கியவர்கட்கும்
- பெரிய மனத்தோடு விளம்பர உதவி புரிந்த வர்த்தக நிறுவனங்கட்கும்.
- கலைப்போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் ஆகியவற்றுக்கு நடுவர்களாகவும், தீர்ப்பாளர்களாகவும் உதவி புரிந்த பெரியார்கட்கும், ஏனையோர்க்கும்.
- அழகாகவும் உரிய நேரத்திலும் இம்மலரை அச்சிட்டுத் தந்த நல்லூர் திருவள்ளுவர் அச்சகத்தினருக்கும்
- விழாவைச் சிறப்பிக்க பிரதம விருந்தினர்களாகவும், சிறப்பு விருந்தினர்களாகவும், கௌரவ விருந்தினராகவும் வருகை தந்த பெரியார் கட்கும்.
- நல்ல முறையில் ஒலி, ஒளி அமைத்துத் தந்த "சுந்தரம் சவுண்ட்ஸ்" உரிமையாளர்களுக்கும்
- நிதி சேகரித்து அனுப்பிய கனடாவில் திரு. ப. ஸ்ரீஸ்கந்த, லண்டனில் திரு. சி. ராஜ்பால், எம்.பி நாதன், நோர்வேயில் திரு. ம. ஸ்ரீதேவா ஆகியோருக்கும்
- சகல கலை போட்டிகள், விளையாட்டுப் போட்டிகளிலும் பங்குபற்றியவர்களுக்கும்
- நாடக ஆற்றுகை செய்த அல்வாய் மனோகர கான நாடக சபா, பாஷையூர் வளர்பிறை நாடக மன்றம், பட்டிமன்றம் நிகழ்த்திய அகில இலங்கை இளங்கோ மன்றத்தினர் ஆகியோருக்கும்
- எமது விழா சிறப்பாக நடந்தேற எம்மோடு தோளோடு தோள் நின்று உதவிய பெரியோர்கள் – இளைஞர்கள் – சிறுவர்கட்கு.

எமது உள்ளம் கனிந்த நன்றிகள்

நிர்வாகம்

அரியாலை 93 ஆவது சு. தி. கொ. விழா

கட்டிடப் பொருட்கள், கம்பி வகைகள்
சீமெந்து , PVC பைப் வகைகள், பெயின்ற் வகைகள்
அனைத்தையும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய ஒரே இடம்

கஜமுகன் காட்வெயர்

தொலைபேசி : 021 - 222 - 2833
021 - 222 - 2368

147, 149 ஸ்ராண்லி வீதி,
யாழ்ப்பாணம்.

துவிச்சக்கர வண்டிகள், அதன் உதிரிப்பாகங்கள், தொலைக்காட்சி பெட்டிகள்
வானொலிப் பெட்டிகள், டில் அன்ரனா வகைகள் மற்றும் இலத்திரனியல்
பொருட்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

இ.ச.பே.நாகரத்தினம் சக நிறுவனம்

52, 54 கஸ்துரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 021 - 222- 3096

உங்கள் அமங்கல வைபவங்களுக்கு நாடுங்கள்

ஈ-சன்ஸ்

E-Sons
Jaffna

148, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 021 222 2695

கிளை: கண்டி வீதி,
சாவகச்சேரி.

பிரத்தியேக

செயற்கைமுறை சினைப்படுத்தல் சேவை

கால்நடை வளர்ப்பவர்களின் வீடுகளுக்கு வருகை தந்து, நவீன தொழில்நுட்ப முறையுடன் கூடிய, வெளி மாவட்டங்களில் இருந்து தருவிக்கப்பட்ட

அதிகுளிர் உறை சுக்கிலத்தினை (DEEP FROZEN SEMEN) பயன்படுத்தி

ஆடு மற்றும் மாடுகளுக்கான

செயற்கைமுறை சினைப்படுத்தல் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்படும்.

கு.ரகுகாந்தன்

(பிரத்தியேக செயற்கைமுறை சினைப்படுத்தல் தொழில்நுட்பவியலாளர்)

தொ. பே :- 021 2229472 / 077 6176423

இல. 15. அருளம்பலம் ஒழுங்கை. அரியாலை.

BALA ENTERPRISES

பாலா எனர்பிறைசஸ்

கட்டிடங்களுக்கு தேவையான அத்திவாரக் கற்கள், உள்ளூர் கருங்கல், சல்லிக்கற்கள், மணி வகைகள் மற்றும் அனைத்து அளவிலும் ஆன மெசின் மூலம் அரிந்த கொங்கிறீற் கற்கள், தூண்கள், அலங்கார கற்கள், அலங்கார தூண்கள் மற்றும் அனைத்து கட்டிடப் பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஸ்தாபனம்

பாலா எனர்பிறைசஸ்

554, கண்டி வீதி,
அரியாலை யாழ்ப்பாணம்
(ஸ்ரீ பார்வதி வித்தியாலயம் அருகில்)

தொலைபேசி :
021-4922804
0779237739